



# தினப்புயல்

PTN news

THINAPPUYAL

திනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06





மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -333









## கோட்டபாய கொலை முயற்சி பழிவாங்கப்பட்ட தமிழர்களும் மறைக்கப்படும் உண்மைகளும்






## பௌத்தர்களின் இனவாத ஆக்கிரமிப்பும் ஆயுதப்போராட்டமும்





## ஐ.நா சபையின் கூட்டத்தொடரும் தமிழ் மக்களின் தீர்வுக்கான சாதக பாதக தன்மைகளும்

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# கோட்டபாய ராஜபக்ஷ கொலை முயற்சி பழிவாங்கப்பட்ட தமிழர்களும் மறைக்கப்படும் உண்மைகளும்

கோட்டபாயாவை கொலை செய்ய முயற்சித்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு கடந்த 14 வருடங்கள் சிறையில் அடைத்து வைக்கப்பட்ட தமிழ் அரசியல்க்கைதி சந்திரபோஸ் செல்வச்சந்திரன் ஈற்றில் வியாழன் அன்று நிரபராதி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார். இக்காலப்பகுதியில் வேறு அவர் புற்றுநோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளார். ஒரு தமிழ் இளையவனின் வாழ்வியலை அநியாயமாக அழித்து அவனை செய்யாத குற்றத்திற்காக இவ்வாறு தண்டித்தமைக்கு சிங்களத்தில் யார் முதலில் பொறுப்பேற்கப் போகிறார்கள்? நான் இங்கு முதலில் என்றே குறிப்பிட்டேன். அதை செய்ய வேண்டிய பட்டியலில் பலர் உள்ளனர். விடுதலை என மட்டும் அறிவிக்கும் நீதிமன்றங்கள் நஷ்டஈடு உட்பட இதற்கான பரிகாரங்கள் எதுவும் குறித்து வாழா இருப்பது ஏன்? தமிழர் என்ற அசமந்தப் போக்கா? இதற்கு முன்னர் கடந்த ஆண்டு 2018 யூலையில் சைவ மதக்குரு சிறீஸ்கந்தராசா 13 வருடங்களின் பின்னர் குற்றவாளியல்ல எனத் தீர்ப்பளிக்கப்பட்டு இதே குற்றத்திற்காக விடுதலை செய்யப்பட்டார் என்பது இங்கு வலியுறுத்த வேண்டிய விடயம். இருவர் விடயத்திலும் அவர்கள் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே அவர்கள் குற்றவாளிகள் என குற்றஞ்சாட்டப்பட்டனர். தாங்கள் வழங்கிய வாக்குமூலம் தாம் சுயாதீனமாக வழங்கியதல்ல என இருவரும் தெரிவித்ததை அடுத்து மேற்கொண்டு எவ்வித தடயங்களையோ சாட்சியங்களையோ வழங்கத்தவறிய நிலையிலேயே இவ்விடுதலைகள் நிகழ்ந்துள்ளன. அவ்வாறாயின் அதற்கு ஏன் முறையே 13 மற்றும் 14 வருடங்கள் சிறீலங்கா நீதித்துறைக்கு தேவைப்பட்டது? ஒரே காரணத்திற்காக விடுதலை செய்யப்பட்ட இருவரையும் ஒன்றாக விடாது ஏன் ஒரு வருடம் 5 மாதங்கள் இடைவெளியில் விடுதலை செய்ய வேண்டும்? உலகமே ஏற்றுக் கொண்ட இலங்கைத்தீவில் தமிழருக்கு ஒரு நீதி சிங்களவருக்கு ஒரு நீதி தான் மீண்டும் காரணமா? இங்கு இன்னுமொரு விடயத்தையும் உங்கள் கவனத்திற்கு கொண்டு வருதல் அவசியமாகிறது. கோட்டா மீது 2006 டிசம்பர் 1ஆம் நாள் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல் எனச் சொல்லப்பட்ட விடயம் குறித்து கோட்டாவின் நெருங்கிய சகாவும் அப்போதைய இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா 2016 மே இல் பாராளுமன்றத்தில் பேசும் போது இவ்விடயம் குறித்து பெரும் குண்டொன்றைத் தூக்கிப் போட்டார். அவர் சொன்னார் கோட்டபாயா மீதான தாக்குதல் உள்ளக வேலை. ராஜபக்ச குடும்பம் மீதான மக்கள் ஆதரவை அதிகரிக்கும் வகையிலேயே கோத்தபாயவினால் திட்டமிடப்பட்டு அரங்கேற்றப்பட்டதே அத் தாக்குதல் என்றார். 25 மீற்றருக்கு தள்ளி வைத்து யாராவது குண்டை வெடிப்பார்களா? என வேறு போட்டுடைத்தார். அவ் குண்டு வெடிப்பில் கோட்டா எவ்வித பெரும் காயங்களுக்கும் ஆளாகவில்லை.

இச்சம்பத்தைக் காரணமாகக் காட்டி புலிகளுடனான அனைத்துத் தொடர்புகளையும் துண்டிக்குமாறு நோர்வேயைப் பணித்த ராஜபக்ச தரப்பு, பின்னர் போர் நிறுத்தத்தில் இருந்து வெளியேறி இராணுவ நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தினர் என்பது வரலாறு. ஆகமொத்தத்தில் தம் சிங்கள மக்களை அணிதிரட்டவும், சர்வதேச சமூகத்தை ஏய்க்கவும் ஆடிய நாடகத்தில் அவர்கள் அனைவரும் பலியானது மட்டுமன்றி, அதை நிஜமெனக்காட்ட பலியாக்கப்பட்ட தமிழர்கள் தற்போது என்னவாகியிருக்கிறார்கள் என்பது மேலும் ஒரு துன்பியல் நிகழ்வு. சோழியன் குடுமி சும்மா ஆடாது 'குதிரை ஓடியபிறகு லாயத்தை மூடிய கதை'யாக, மக்களை அணி திரட்டும் பணியில் கூட்டமைப்பு களமிறங்கப்போகின்றதாம். 'எமது இனத்திற்கு விரோதமாக இந்த அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளிற்கு எதிராக மக்களை அணிதிரட்டுவதற்கு தமது கட்சியின் இளைஞர்கள், தொண்டர்கள் மற்றும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் தயாராக வேண்டும்' என தமிழரசு கட்சியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா அறைகூவல் விடுத்திருக்கின்றார்.

தமிழரசு கட்சியின் வவுனியா மாவட்ட இளைஞர் மற்றும் மகளிர் அணியின் ஏற்பாட்டில் கட்சியின் 70ம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வு கடந்த வாரம் இடம்பெற்றது. அங்குதான் புற்றுக்குள் இருந்து வெளியே வந்து சீறும் பாம்பாகச் சீறியிருக்கின்றார் மாவையர் இனமழிந்த கடந்த பத்து வருடங்களாக சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களுக்கு சாமரம் வீசிக்கொண்டிருந்து விட்டு, இப்போது மக்களை அணிதிரட்டி ஏதோ வெட்டிக்கிழிக்கப்போவதாக மாவையர் திருவாய் மலர்ந்தருளியிருப்பது, தமிழர்களுக்கு நல்லது நடக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்திலல்ல. அடுத்த நாடாளுமன்றத் தேர்தலிலையும் வெற்றி பெற்று அரியாசனத்தில் அமரவேண்டும் என்ற அதீத எதிர்பார்ப்புத்தான்.

அதுசரி. சோழியன் குடுமி சும்மா ஒன்றும் ஆடாது. கத்துக்குட்டியின் வரலாற்றுத் திரிப்பு. தமிழர்கள் வாழ்ந்த தேசம் தமிழீழம். அந்தத் தேசத்தை மீட்பதற்குத்தான் தமிழ் மக்கள் தங்கள் உயிர்களை அர்ப்பணித்துப் போராடினார்கள். அளப்பரிய தியாகத்தை செய்திருக்கின்றார்கள். ஆனால், சிங்களவர்களுடைய நாட்டில் தமிழீழம் கேட்பது போன்று அரசியல் கத்துக்குட்டி எம்.ஏ.சுமந்திரன் கூறியிருக்கின்றார். இலங்கைதமிழரசுக்கட்சியின்70வது ஆண்டு நிறைவு விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதுதான் அவர் இதனைச் சொல்லியிருக்கின்றார். அவர் சொன்னதை நீங்கள் ஒருக்கா வடிவாகக் கேளுங்கோ! "நீங்கள் எங்களையும் உங்கள் தேசத்தில் உள்வாங்கி எமக்கும் உரிய உரிமைகளை வழங்கி வாழ விருப்பமில்லை என்று சொன்ன காரணத்தினாலே எங்களை தனியே போகவிடுங்கள் என்ற தீர்மானத்தினை வட்டுக்கோட்டையில் நாங்கள் நிறைவேற்றினோம்" என்று சொல்லியிருக்கின்றார்.

தமிழினத்தின் வரலாறு தெரியாத ஒருத்தரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு நுழைக்கும்போதே, எதிர்காலத்தில் தமிழர்களை நாசமாக்கவே நுழைக்கப்பட்டார் என்பது அனைவருக்கும் புரிந்திருந்தது. கொடுத்த வேலையை சுமந்திரன் கனகச்சிதமாகவே செய்துகொண்டிருக்கின்றார். அதுசரி, கொடுத்த காசுக்கு கூவத்தானே வேணும். வரலாறு, போராட்டம், கொள்கை தெரியாத கூட்ட(மைப்பு)ம்இலங்கைத் தீவில் தமிழினம் ஒருதேசியஇனம்என்பதில்விடுதலைப்புலிகள் மிக உறுதியாகவே இருந்தார்கள். 'தமிழ் மக்கள் சிறுபான்மை இனமல்ல' என்பதை பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அவர்கள் ஆதாரபூர்வமாக நிரூபித்துள்ளார்கள்.

விடுதலைப் புலிகளின் இந்தக் கோட்பாடுகள் தெரியாமல் வேற்றுக்கிரகத்தில் இருந்துவந்தவர்களைப்போல், தமிழ் மக்களை சிறுபான்மை இனமாக்குவதில் விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முனைந்திருக்கின்றது. கடந்த வாரம் கைதடி விநாயகர் முன்பள்ளி பரிசளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தமிழ் மக்களை சிறுபான்மை இனம் என்று குறிப்பிட்டுள்ளார். தமிழர்களின் வரலாறு, போராட்டம், கொள்கை எதுவும் தெரியாத இவர்கள் எல்லாம் எப்படித்தான் கூட்டமைப்பிற்குள் நுழைந்தார்களோ..? "எங்களுடைய முழு உரிமையை பறிக்கும் செயல் இந்த தேசிய கீதப் பிரச்சனை, ஒரு தேசிய இனம் தான்




இருக்கின்றது. அதற்கு கட்டுப்படுங்கள் என்று சொல்கிறார்கள். அப்போ நாங்கள் வந்தேறு குடிகள்,அடிமைகளாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். சிறுபான்மையினம் தாங்களே ஒரு தேசியகீதத்தை உருவாக்கி படிக்கட்டும் என்று எதிர்பார்க்கிறார்களோ தெரியாது" என்று சரவணபவன் ஆதங்கப்பட்டிருக்கின்றார். அதுசரி, வேலியே பயிரை மேயும்போது, மாட்டுக்கடித்து என்ன பயன்? காணாமல் ஆக்கப்பட்ட என்னுடைய பிள்ளையென சிங்கள மொழி பேசும் பிள்ளையை காட்டினார்கள்! ஜெயவனிதா

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவரவே இரண்டாம் மாடி விசாரணைக்கு அழைத்திருந்தார்கள் என காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் வவுனியா மாவட்ட சங்கத் தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதா தெரிவித்துள்ளார். வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக கடந்த 1060 நாட்களாக போராட்டம் மேற்கொள்ளும் பந்தலில் இன்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், அன்றைய தினம் கொழும்பிலுள்ள இரண்டாம் மாடி விசாரணைக்காக நானும் என்னுடைய கணவரும் போயிருந்தோம். உங்களுடைய பிள்ளை இதுதானா எனக் கூறி ஒரு பெண் பிள்ளையை காட்டினார்கள். இது என்னுடைய பிள்ளை இல்லையென்று கூறி மறுத்தேன். இல்லை நீங்கள் படத்தில் காட்டும் பிள்ளை தான் இந்த பிள்ளை எனக் கூறினார்கள். என்னுடைய பிள்ளைக்கும் நீங்கள் காட்டும் பிள்ளைக்கும் வித்தியாசம் உள்ளது. இதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். பொலன்னறுவையிலிருந்து சிங்கள மொழி பேசுகின்ற பிள்ளையை கொண்டுவந்திருந்தார்கள். எங்களுடைய பிள்ளைகள் தமிழ் பேசும் பிள்ளைகள். இதனை நான் ஏற்றுக்கொள்ள முடியாதென்று கூறி நான் முற்றுமுழுதாக மறுப்பு தெரிவித்திருந்தேன்.

இந்த பிரச்சினையை இத்தோடு முடிவுக்கு கொண்டு வர வேண்டும். அதுதான் நாங்கள் இவ்வளவு காலமும் எடுத்த முடிவு. இன்றைக்கு தான் எங்களுக்கு கையில் பிள்ளை கிடைத்திருக்கிறது. அதனால் தான் நாங்கள் இன்று உங்களை விசாரணைக்கு கூப்பிட்டிருப்பதாக அவர்கள் கூறினார்கள். நீங்கள் பிரச்சினையை முடிக்கலாம். ஆனால் என்னுடைய பிள்ளையென கூறி பிரச்சினையை முடிக்க வேண்டாம் என கூறியிருந்தேன். படத்தில் இருப்பது என்னுடைய பிள்ளை. ஆனால் நீங்கள் கொண்டு வந்து காட்டிய பிள்ளை என்னுடையதில்லை. படத்தில் இருப்பது தான் என்னுடைய பிள்ளை என உறுதியாக கூறியிருந்தேன். இப்போது அவர்களுக்கு எங்களுடைய போராட்டத்தை மழுங்கடிக்கிறது தான் அவர்களுடைய நோக்கமாகவுள்ளது. நீங்கள் தான் காணாமல் போன சங்கத்தின் தலைவியா என என்னிடம் கேட்டிருந்தார்கள். நான் ஓமென கூறியிருந்தேன். நான் என்னுடைய பிள்ளை மட்டும் தான் காணாமல் போனதென கேட்கவில்லை. எல்லா தாய்மார்களுடைய பிள்ளைகளையும் தான் கேட்டுக்கொண்டிருக்கிறோம். என்னுடைய பிள்ளைக்காக மட்டும் நான் குரல் கொடுக்கவில்லை. எல்லோருடைய பிள்ளைகளுக்காகவும் தான் குரல் கொடுக்கின்றேன். என்னுடைய பிரச்சினையை முடிக்கவும் இயலாது. போராட்டத்தில் ஈடுபடும் தாய்மார்களுக்கு எங்களுடைய தமிழ் மக்கள் எல்லோரும் ஒன்றாக குரல் கொடுப்போம். நாங்கள் உண்மையாக வெளிநாடுகளை தான் கேட்டுக்கொண்டிருக்கிறோம். எங்களுடைய பிள்ளைகளிற்கு சரியான ஒரு தீர்வு கிடைப்பதாக இருந்தால் வெளிநாடுகள் தான் வரவேண்டும்.

அன்றைய விசாரணையின் போது அவர்களிடமும் நான் அதனை கூறியிருந்தேன். வெளிநாடுகள் வந்து எங்களுடைய பிரச்சினையை முடிப்பதாக இருந்தால் நாங்கள் அதனை ஏற்றுக்கொள்வோம் என கூறியிருந்தேன். நீங்கள் சரியான முறையில் பிரச்சினையை முடிக்க மாட்டீர்கள். இவ்வாறு எல்லோரும் தனித்தனியாக இருந்தால் ஒவ்வொருவராக விசாரணைக்கு கூப்பிட்டு எங்களுடைய போராட்டங்களை மழுங்கடிக்க செய்துவிடுவார்கள். எல்லா தாய்மாரும் ஒன்றாக இணைந்து வெளிநாட்டினுடைய உதவியை கேட்பதாக இருந்தால் இரண்டு, மூன்று மாதங்களில் தீர்வினை பெறமுடியும்.

தமிழ் மக்கள் அனைவருக்கும் சேர்த்தே நான் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். தமிழருடைய பிரச்சினை தீரவேண்டும். நானும் ஒரு தமிழன் தான் எங்களுடைய பிரச்சினை தீர்ந்தால் தான் முற்றுமுழுதாக இலங்கையில் தமிழ் மக்களுடைய பிரச்சினை தீர்விற்கு சமன். மழுங்கடிக்கும் நோக்குடனே இந்த விசாரணை பிரிவிற்கு ஒவ்வொருவரையும் கூப்பிடுகிறார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மைத்திரியுடன் புகைப்படத்தில் உள்ள தனது மகள் எங்கே? ஜெயவனிதா கேள்வி இறுதிக்கட்ட யுத்தின் போது காணாமல் போன நிலையில் ஜனாதிபதியுடன் புகைப்படத்தில்காணப்பட்ட தனது மகள் தொடர்பில் ஜனாதிபதி மைதிரிபால சிறிசேனவே உரியபதிலைவழங்கவேண்டும் என காணாமல் போன காசிப்பிள்ளை ஜெரோமியின் தாய் காசிப்பிள்ளை ஜெயவனிதா கோரிக்கை விடுத்துள்ளார்.

11ஆம் பக்கம் பார்க்க...

நெற்றிபொறியன்

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## தமிழ் மக்களின் அகிம்சை போராட்டங்களும் ஐ.நா மாநாடும்

இன்றைய அரசியல் சூழ்நிலையில் காலத்துக்கு காலம் மாறுபட்ட விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட பொழுதிலும் குறிப்பாக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்டத்திற்கு பின்னரான அரசியல் மாற்றம் என்பது மேலும் தமிழ் மக்களுக்கு சாதகமாக வலு சேர்ப்பதாகவே அமைந்திருக்கிறது எனலாம். இருந்தாலும் கூட இந்த கொரோனா வைரசினுடைய தாக்கம் என்பது உலகளாவிய ரீதியில் பாரிய சேதத்தை விளைவித்ததன் ஊடாக பல்லாயிரக்கணக்கான மக்கள் இறந்ததன் ஊடாக இன்று இந்த கொரோனா வைரசினூடான தாக்கத்தை அடுத்து உலக நாடுகள் ஓர் நாட்டினுடைய பிரச்சனைகளை அங்கு நடைபெறுகின்ற சில விடயங்களில் அதற்கு முன்னுரிமை கொடுக்காது கொரோனா வைரஸை எவ்வாறு நாட்டில் கட்டுப்படுத்துவது உயிர் சேதத்தை எவ்வாறு இல்லாமல் செய்வது என்ற நடவடிக்கைகளை தான் அவர்கள் மேற்கொண்டுவருகிறார்கள்.

ஆகவே இதே உத்வேகத்தோடு ஜெனீவாவினுடைய அமர்விலே இந்த சர்வதேச வல்லரசு நாடுகள் ஒன்றிணைந்து தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வை பெற்றுத்தருவார்கள் என்ற நம்பிக்கை தமிழ் தரப்பில் ஓரளவு முன்னேற்றமடைந்திருக்கிறது என்று தான் கூற வேண்டும். போராட்டத்தினூடாக தான் தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வு கிடைக்கும் என்பது மட்டுமல்ல இங்கு உள்நாட்டிலும் சில அழுத்தங்களை அரசாங்கத்திற்கு கொடுக்க வேண்டிய தேவையிருக்கிறது. அதே நேரம் மாகாணசபை தேர்தல் இலங்கையில் இடம்பெறுமாக இருந்தால் அது மாகாண சபைகளினூடாக அமைச்சுக்களையும் உறுப்பினர் பதவிகளையும் எடுத்து அதனூடாக குரல் கொடுப்பதற்கான அதனூடாக முன் நகர்வுகளை நகர்த்தி செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். உலக நாடுகளை பொறுத்தவரையில் பூகோள அரசியலுக்குள் இலங்கை அரசியல்சிக்கியிருப்பதன்காரணமாகபூகோளஅரசியலில் இருந்து இலங்கை ஒன்றில் விடுபட வேண்டும் அல்லது பூகோள அரசியலுடன் ஒத்ததான அரசியலை செய்ய வேண்டும். இந்த இரண்டு நடவடிக்கைகளையும் தான் இலங்கை அரசு செய்ய முடியும் அல்லது தமிழ் தரப்பு செய்ய முடியும். அவ்வாறு செய்வதனூடாக தான் எமது இலக்கை நாங்கள் அடையமுடிவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. எதிர்த்தரப்பு என்னும் பொழுது தமிழ் தரப்பின் உத்யோசனைகள் மற்றும் அவர்களின் அபிலாசைகள் அவர்களுடைய எண்ணங்களை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் எந்தவொரு காலகட்டத்திலும் தயாராக இருக்கவில்லை என்பதனையே காட்டுகிறது. அகிம்சை போராட்டமானது நாடுகளை வெற்றியடைய வைத்திருக்கிறது. அதே நேரத்தில் மக்கள் புரட்சி என்பது தான் மிக முக்கியமான ஒரு தமிழர்களுடைய அல்லது உலக நாட்டிலிருக்க கூடிய மக்களுடைய புரட்சி என்பது தான் வெற்றிக்கு வித்திட்டிருக்கிறது. ஒரு மக்கள் புரட்சி இந்த நாட்டிலே ஒரு சிறுபான்மையின சமுதாயத்தினூடாக வெடிப்பதனூடாகத் தான் தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என்பதிலே மாற்றுக்கருத்தில்லை.

அதேநேரம் போர்க்குற்றம் இனப்படுகொலை என்று அரசாங்கத்தின் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு இன்று சர்வதேச நீதிமன்றந்திலே இவர்களை குற்றவாளிகளாக்குகின்ற ஒரு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற அதே சமயம் ஜனாஸா எரிப்பு விவகாரம் மனித உரிமைகள் மீறல் தொடர்பான பல விடயங்களிலே ஆயிரம் ரூபாய் சம்பள பிரச்சனை போன்றவை கூட தகர்த்துவதற்கான நடவடிக்கை அரசாங்கம் எடுத்து வருகிறது என்றால் மனித உரிமை கௌன்சில்களிலே அல்லது ஐ.நா சபையிலே அதனை தெளிவுபடுத்தி நாங்கள் ஒரு ஜனநாயக வழியில் பயணிக்கின்றோம் என்ற விடயத்தை கூறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அவர்கள் செய்து வந்திருக்கிறார்கள். அது போன்று தமிழ் ஒட்டுக்குழுக்களையும் பயன்படுத்தி தங்கள் பக்கம் திருப்பிக்கொண்டு அதற்கான மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இன்னும் பலர் அதில் நியமித்து அதனூடாக சில நடவடிக்கைகள் செய்வதற்கும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

தொல்பொருள் ஆராய்ச்சி என்ற பெயரில் அரச மரங்களும் மலைகளும் இருக்கின்ற இடங்களிலே பௌத்த கோவில்களை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். இவையனைத்தும் உண்மையிலே முறியடிக்கப்பட வேண்டும் ஆகவே இந்த காலகட்டத்தில் தமிழ் பேசும் மக்களாகிய நாம் தமிழ் சார்ந்த அனைத்து கட்சிகளும் ஒரு குடையின் கீழ் ஒன்றிணைந்து வருகின்ற பிரச்சனைகளை செயற்படுவதனூடாகவே அதற்கான நடவடிக்கைகளை பெற்றுக்கொள்ள முடியும் என்பதே இன்றைய யதார்த்த பூர்வமான உண்மை.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

136 சதுக்கங்கள், பாரிய வீதிகளின் நடுப்பகுதி போன்ற இடங்களில் நகர்வதையும் இருப்பதையும் தவிர்த்துக்கொள். கட்டடங்களுடன் நெருக்கமாக ஒட்டியபடி இரு. அவற்றின் துருத்திய பகுதிகளுக்குப் பின்னாலும் வாயில்களினுள்ளும் கட்டடங்களின் கோபுரங்களுக்குப் பின்னாலும் மறைந்துகொள். எதிரியின் கட்டுப்பாட்டிலிருக்கின்ற கட்டடங்களை இயந்திரச் சுடுகலன்களால் தாக்கு. அவற்றினுள் சாதாரண மற்றும் ராங்கியெதிர்ப்புக் கையெறிகுண்டுகளை வீசு. மரத்தினாலான கட்டடங்களை எரியூட்டு, கல்லாலான கட்டடங்களினுள் அல்லது ஆழமான நிலவறைகளில் இருக்கின்ற பாசிஸ்டுக்களின் இருப்பிடங்களைக் கட்டடங்களைத் தகர்ப்பதன்மூலம்அழி. வீதிச்சமரை மேற்கொள்வதற்குத் தன்னியக்கச் சுடுகலன்களையும் சிறியரக இயந்திரச் சுடுகலன்களையும் கொண்டிருப்பது சிறந்தது. வீதிச்சமர்ச் செயற்பாட்டில் வீரத்தையும் வேகத்தையும் நிலைமையைச் சமாளிக்குந் திறனையும் வெளிக்காட்டு.

எதிரிப் படைகள் நெருங்கி வருவதைப் பற்றிய தகவலைக் கெரில்லாப் படைப்பிரிவின் தலைமையகத்திற்கு எச்சரிக்கை செய்வதற்காக, மக்கள் வாழ்விடத்தைக் கைப்பற்றும் நடவடிக்கை நடைபெறும் நேரம் முழுவதும் வேவு பார்ப்பது அவசியமாகும்.

கெரில்லாப் படைப்பிரிவின் பணியில் மக்கள் வாழ்விடத்தைக் கைப்பற்றித் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பணியும் உள்ளடக்கப்படுகின்றதென்றால், அதனைப் பின்வரும் ஒழுங்கில் மேற்கொள்ளலாம். சமருக்குக் காப்பு வழங்குகின்ற முறியடிப்பு அணி தமது இடத்திலேயே இருந்து, பதுங்குகுழி அமைப்பார்கள். சேமப்படை வாழ்விடத்தின் சுற்றுவட்டாரத்திலுள்ள எதிரியின் தற்காப்புக் கட்டுமானங்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதுடன், அவற்றைச் சமர்த் தயார்ப்படுத்தல் நிலையிலும் வைத்திருப்பார்கள். ஏனைய கெரில்லாக் குழுக்கள் எஞ்சியிருக்கின்ற பாசிச முகாம்களையும் நிர்வாகங்களையும் பிடிப்பார்கள். கைவிடப்பட்ட ஆயுதங்கள், வெடிபொருட்கள், உபகரணங்கள் போன்றவற்றைச் சேகரிப்பார்கள். எரிந்த தீயெச்சங்களை அணைப்பார்கள். அயல் பிரதேசத்திலுள்ள எதிரியின் முயற்சிகளைப் பற்றியும் செயற்பாடுகளைப் பற்றியும் வேவுகாரர்கள் தகவலெடுப்பார்கள்.

### சமரிலிருந்து வெளியேறுதல்

திகைப்புத் தாக்குதல், பெரியளவிலான அசையுந்திறன் ஆகிய இரண்டுமே கெரில்லாக்களின் சகல செயற்பாடுகளினதும் அடிப்படையாகும். ஒரு இடத்தில் நீண்ட சமரை மேற்கொள்வது



கெரில்லாக்களுக்கு நல்லதல்ல. ஏனெனில், இந்நேரத்தில் எதிரி புதிய படைகளைப் பெற்றுக்கொள்வதில் வெற்றி கண்டுவிடுவான். தீவிரமான தற்காப்புச் சமரை மேற்கொள்ளுகின்ற சிறப்பான பணி இல்லையென்றால், அதனை மேற்கொள்வதைத் தவிர்.

எதிரி கெரில்லாக்களைச் சமரிட நிர்ப்பந்திக்கும் நிலைமைகளும் ஏற்படுகின்றன. எடுத்துக்காட்டாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். எதிரியின் காவலணியைக் கெரில்லாக்கள் வீதியில் வைத்துத் தாக்கும் போது அதற்குப் பின்னால் சற்றுத் தூரத்தில் வருகின்ற பாசிசப் படைப்பிரிவு கெரில்லாக்களைச் சுற்றிவளைத்து அவர்களுடன் சமரைத் தொடங்குதல் கெரில்லாக்கள் புகைவண்டியைத் தடம்புரட்டி அதனது பெட்டிகளிலுள்ள பாசிஸ்டுக்களைக் கொல்லும் போது அருகிலுள்ள புகைவண்டி நிலையத்திலிருந்து வாகனங்களில் வந்த ஜேர்மனியப் படைகள் கெரில்லாக்களை மூன்று பக்கத்தால் சுற்றிவளைத்தல் காட்டில் கெரில்லாக்கள் தங்கியிருக்கின்ற போது ஜேர்மனியத் தண்டனையளிக்கும் படைப்பிரிவு திடீரெனக் கெரில்லாக்கள் மீது தாக்குதல் தொடுத்தல் போன்றவாறானவையே அவையாகும். இவ்வாறான சமயங்களில் கெரில்லாக்கள் சமரிட நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

படைபல விகிதாசாரமும் பொதுவான சூழ்நிலையும் திடமான, தீர்க்கமான செயற்பாடுகளால் பாசிஸ்டுக்களை ஒடுக்கக் கெரில்லாக்களுக்கு உதவக்கூடியதாக இல்லையாயின், சமரிலிருந்து வேகமாக வெளியேற வேண்டும். அத்துடன் பின் தொடரலிலிருந்தும் தப்பித்துக்கொள்ள வேண்டும்.

கெரில்லாப் படைப்பிரிவை எதிரி பூரணமாக முற்றுகையிடலாம். இந்நிலைமையில் அவர்கள் எதிரியினது முற்றுகை வட்டத்தின் மிகப் பலமற்ற பகுதியில் உடைத்து வெளியேறுவதற்கான சமரை மேற்கொள்கின்றனர். இந்தப் பலமற்ற இடத்தை வேவினால் கண்டறிய வேண்டும். பிரதான படைகள் உடைப்பை மேற்கொள்கின்ற போது ஒரு பகுதி கெரில்லாக்கள் தங்களது சூட்டினால் முற்றுகை வட்டத்தை இறுக்க முனைகின்ற பாசிஸ்டுக்களிடமிருந்து தமது தோழர்களைக் காப்பதற்காகச் சூடுகளை வழங்குவார்கள். உடைப்பு மேற்கொள்ளப்பட்ட மாத்திரத்தில் அதனது பக்கங்களுக்குக் கெரில்லாக்கள் பலமான சூட்டுக் கருவிகளுடன்சென்றுதமதுஏனைய தோழர்கள் வெளியேறுவதற்குத் துணைபுரிவார்கள். பின்னர் அவர்கள் அருகிலுள்ள வசதியான நிலைகளுக்குச் சென்று முழுப் படைப்பிரிவும் வெளியேறுவதற்காகச் சூட்டுக்காப்பு வழங்குவார்கள். இறுதியில் எதிரியிடமிருந்து தங்களையும் விடுவித்துக்கொண்டு படைப்பிரிவுடன் இணைவதற்காகச் சுற்றுவழியில் செல்வார்கள்.

வெளியேறுவதற்கான பாதை இருக்கின்றதும் முற்றுகை இன்னமும் பூரணப்படுத்தப்படாததுமான நிலை இருக்கின்ற போது கெரில்லாக்கள் தொடர்ச்சியான பின்வாங்கலை மேற்கொள்ள வேண்டும். சகல ஆயுதங்களையும் வெடி பொருட்களையும் அவசியமான உணவுப் பொருட்களையும் அப்புறப்படுத்த வேண்டும். காயமடைந்துள்ள தோழர்களையும் வெளியேற்ற வேண்டும். இதற்காகவென எதிரியால் இன்னமும் கைப்பற்றப்படாத பக்கங்களுக்கு மிகவும் திடமான அனுபவமுள்ள கெரில்லாக்களைக் கொண்ட குழுக்கள் மாத்திரமே அனுப்பப்படுகின்றன. இவர்கள் கடைசிச் சந்தர்ப்பம் வரை எதிரியைத் தடுத்து நிறுத்த வேண்டும். இக்குழுக்கள் தன்னியக்கச் சுடுகலன்களைத் தரித்திருப்பதுடன் கண்ணிகளையும் கொண்டிருக்க வேண்டும். இன்னொரு பகுதி கெரில்லாக்கள் படைப்பிரிவைச் சுற்றிச் சூட்டுக்காப்பு வட்டமொன்றை உருவாக்குவார்கள். இது எதிரி வேகமாகத் தாக்குதலில் இறங்குவதற்கு இடையூறாக இருக்கின்றது. எதிரியின் தாக்குதல் கூடியளவில் சாத்தியமான அருகிலுள்ள பாதைகளுக்குக் கண்ணிகளும் விதைக்கப்படுகின்றன.

தொடர்வான்...

நெற்றிப்பொறியன்

# பௌத்தர்களின் இனவாத ஆக்கிரமிப்பும் ஆயுதப்போராட்டமும்

ஆராய்ச்சி என்கிற பெயரில் குறிப்பாக வடக்கு கிழக்கில் தமிழர் தாயகப் பிரதேசங்களை அபகரிக்கும் நிலைமைகள் தற்போது உருவாகியுள்ளது. இதனை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அவர்கள் பௌத்த தேரர்களை வைத்தே காய்நகர்த்தி வருகிறார். கடந்த காலங்களிலும் பொதுபல சேனா, ராவண பலய போன்ற அமைப்புக்களினூடாக இவ்வாறான செயற்பாடுகள் முன்னகர்த்தப்பட்டது.

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் அம்பேபிட்டிய சுமண ரத்ன தேரர் என்பவர் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுக்கும் தொனியில் நடந்து கொண்டதுடன், அரச அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு தடையை ஏற்படும் விதத்தில் செயற்பட்டுள்ளார். இவ்வாறு நாட்டில் குழப்பவாதிகளாகச் செயற்படுபவர்கள் தொடர்ந்தும் சுதந்திரமாக நடமாடுகின்றார்கள். இவருக்கு நிலுவையில் பல வழக்குகள் இருக்கிறது.

இந்த சுமன ரத்ன தேரர் விடுதலைப்புலிகளின் காலத்தில் அமைதியாக செயற்பட்டவர். தற்போது தமிழினத்திற்கு எதிராகவும் அரசாங்கத்தைத் திருப்திப்படுத்தும் வகையில் பௌத்த தேரர் என்ற முத்திரையை தரித்துக் கொண்டு அராஜகத் துறவியாக செயற்பட்டு வருகின்றார். இவருடைய செயற்பாடுகளை அடக்கி ஒடுக்க தமிழினம் கிழக்கு மாகாணத்தில் ஒன்றுபட வேண்டும். பிள்ளையான், கருணா, வியாழேந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவர் தொடர்பில் வாயறிக்கைகளை மாத்திரம் வெளியிட்டுவிட்டு மௌனிப்பில் இருக்கிறார்கள். இவருடைய சத்தத்திற்குப் பயந்து சட்டமும் செயற்படுகிறது. எமது உயிரை கொல்ல வருகின்ற ஒருவரை நாம் கொல்ல முடியும். ஆகவே சுமன ரத்ன தேரர் மக்களால் விரைவில் தண்டிக்கப்படவேண்டியவர். பௌத்த துறவிகள் இந்த நாட்டை பௌத்த நாடு என விழித்து வருவதால் அரசாங்கமும் அவர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகின்றது. மகாவம்சம் என்பது திரிபுபடுத்தப்பட்டு எழுதப்பட்டுள்ளது. 20ஆவதுதிருத்தச்சட்டம்என்பதுசிறுபான்மை இனத்தைப் பாதிக்கின்ற வகையில் அமைந்துள்ளது. குறிப்பாக இன, மத, மொழி, நிலப்பரப்பு, வடகிழக்கு இணைப்பு போன்ற விவகாரங்கள் சிறுபான்மை இனத்துக்கு பாதகமாகவே அமையப்பெற்றுள்ளது. அபிவிருத்தி என்பது குறித்த அரசாங்கம் தமிழ் மக்களுக்குச் செய்யவேண்டிய கடமை.

ஆகவே தமிழர் உரிமைக்காகப் போராடியதை பயங்கரவாதப் போராட்டமாகச் சித்தரித்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தடைகளைப் பிறப்பித்து தமக்குச் சாதகமான நிலைமைகளை இலங்கையரசு உருவாக்கியுள்ளது. மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட பொதுமக்களும் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்களும் இந்தப் போரில் உயிரிழந்துள்ளனர். குண்டுத் தாக்குதலினால் அப்பாவிப் பொதுமக்களின் உயிர்கள் காவு கொல்லப்பட்டது. இது வரை 245இற்கும் மேற்பட்ட இடங்களில் இனப்படுகொலைகளை இலங்கை அரசு நடத்தியுள்ளது.

இதன் பின்னராவது தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் அரசாங்கம் அக்கறை காட்டாமல் மேலும் மேலும் சிறுபான்மை இனத்தைக் குழிதோண்டிப் புதைப்பதற்காக தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம் புராதன இடங்களைப் பாதுகாக்கின்றோம் என்கிற பெயரில் தமிழர்களை அடக்க நினைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆயுதப்போராட்டம் முடிவடைந்து பத்தாண்டுகளைக் கடந்துள்ள நிலையிலும் இன்றுவரை தமிழினத்திற்கு விடுதலை இல்லை என்கிற போது, 1983 யூலைக் கலவரத்தின் போது நடந்த கொடூர சம்பவங்களையே அரசு மீளவும் நினைவுபடுத்துகிறது. தமிழினம் தனக்கானத் தீர்வினைத் தேடிச் சென்றபோது அதற்கான தீர்வுகள் எட்டப்படவில்லை என்கிற காலத்தின் கட்டாயத்தினாலேயே ஆயுதமேந்திப் போராட நேரிட்டதே தவிர,






தீவிரவாதிகளாக தமிழீழ விடுதலைப்புலிகள் உருவெடுக்கவில்லை. கடல், வான், தரை என முப்படைகளையும் வைத்திருந்த விடுதலைப்புலிகள் 58இற்கும் மேற்பட்ட கட்டமைப்புக்களை வைத்திருந்தார்கள்.

இவ்வாறு வடக்கு கிழக்கில் ஒரு நாட்டுக்குள் தமது கட்டமைப்புக்களை வைத்திருந்த விடுதலைப்புலிகள் அமைப்பு பயங்கரவாதிகள் என அரசால் முத்திரை குத்தப்பட்டதுடன் வடகிழக்கில் புராதன விகாரைகள் இருந்ததற்கான ஆதாரங்கள் இருப்பதாகக்கூறி பௌத்த விகாரைகளை நிறுவி தொல்பொருள் திணைக்களத்தினூடாக அடாவடித்தனமாக தமிழர் பிரதேசங்களை கையகப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனை தமிழினம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

அபிவிருத்தி - வேலைவாய்ப்பு போன்ற விடயங்களை தமிழ் மக்களுக்குச் செய்துவிட்டால் அல்லது அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கும் தமிழ் அரசியல் வாதிகளுக்குச் சலுகைகளை வழங்கி, தமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொண்டு, தமிழினத்தையும், சர்வதேசத்தையும் ஏமாற்றுகின்ற வேலைகளைத் தான் அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இந்த நிலைமைகள் தொடருமாகவிருந்தால் தமிழ் மக்கள் தமக்கான உரிமைகளை வென்றெடுக்க முடியாத சூழ்நிலைகள் உருவாகும். ஆகவே 20ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாமல் செய்வதன் ஊடாக ஓரளவேனும் தமிழ் மக்கள் இந்த நாட்டில் நிம்மதியாக வாழ ஏதுவான நிலைமைகளை அமைத்துக்கொள்ளலாம்.

வெறுமனே அபிவிருத்தி அரசியலை வைத்து கடந்த காலங்களில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற விடயங்களில் ஈடுபட்டு வந்த தரப்புக்கள் எல்லாம் இன்று தமிழ் மக்களுக்காகக் குரல்கொடுக்கின்றோம் என்கிற போர்வையில் ஏமாற்று அரசியலைச் செய்து வருகின்றார்கள். தமிழ் மக்களும் இவர்களை நம்பி வாக்களித்து தற்போதும் பெரும் ஏமாற்றத்துடனேயே வாழ்ந்து வருகின்றார்கள். கடந்த காலங்களில் 22 ஆசனங்களோடு பாராளுமன்றில் பலமாக இருந்த தமிழ்த் தரப்பு, இன்று அரசு திட்டமிட்டு கட்சிகளை உடைத்து பலவீனத்தை ஏற்படுத்தி சலுகைகளை வழங்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஒன்றை இல்லாமல் செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது 10 பாராளுமன்ற ஆசனங்களையே தம்வசம் கொண்டிருக்கிறது.


கடந்த காலங்களில் கிழக்கில் மாகாண சபையை இழந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனிவரும் காலங்களில் வடக்கு மாகாண சபையையும் இழக்கவேண்டும் என்கிற நிலையினைக் கருத்திற்கொண்டே அரசாங்கம் நன்கு திட்டமிட்டு வட கிழக்கில் தேர்தல் காலங்களில் சுயேட்சைகளைக் களத்தில் இறக்கி தமது செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தி வருகின்றார்கள். இந்த நிலைமைகள் தொடருமாக இருந்தால் பாராளுமன்றம், மாகாணசபை, உள்ளூராட்சி மன்றம் என சகல தேர்தல்களிலும்வெற்றிபெற்றுதமிழ்மக்களை தமது பிடிக்குள் கொண்டுவரும் அதேநேரம், இந்த நாட்டில் இடம்பெற்றது பயங்கரவாதமே தவிர அரசு இனப்படுகொலையினை மேற் கொள்ளவில்லை என்கிற செய்தியினையே இவர்கள் சர்வதேசம் வரை கூறப் போகின்றார்கள்.

ஆகவே தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களம் என்கிற போர்வையில் நடத்தப்படும் செயற்பாடுகளை முதலாவதாக தடுத்து நிறுத்த வேண்டும். தமிழினத்தின் விடுதலைக்காக போராடி உயிர்த்தியாகம் செய்த மறவர்களையும், மக்களையும் அஞ்சலி செய்யக்கூடாது என தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளுக்கு எதிராக தமிழினம் களத்தில் இறங்கவேண்டும். தமிழ் அரசியல் தலைமைகளை நம்பிப் பயனில்லை. தியாகி திலீபன் 'மக்கள் புரட்சி வெடிக்கட்டும். சுதந்திரத் தமிழீழம் மலரும்' என்று இறுதியாகக் கூறியதைப்போன்று வடக்கிலும், கிழக்கிலும் ஒரு மக்கள் புரட்சி வெடிக்கவேண்டிய தேவை சிறுபான்மை இனத்திற்கு கட்டாயமாக உள்ளது. மக்கள் புரட்சிக்கு முன்பாக எந்தவொரு அரசாங்கமும் ஈடுகொடுக்க முடியாது. தொடர்ந்தும் எம்மினத்தை ஆயுதமுனையின் மூலமாக அடக்கிவிட முடியும் என்று இவ்வரசு கனவுகாண்பது தவறு.

நீண்ட காலம் சீனாவும், இந்தியாவும் இவர்களுக்குக் கைகொடுப்பார்கள் என்று அரசு நம்பியிருக்கிறார்கள். அரசியல் என்பது காலத்திற்குக் காலம் மாற்றம் பெறுபவை. கடந்த காலங்களில் இந்தியா விடுதலைப்புலிகளுக்கு ஆயுதப் பயிற்சிகளை வழங்கியது. அதுபோல் எதிர் காலங்களில் அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் ஆயுதப் பயிற்சிகளை வழங்கி இந்த நாட்டுக்குள் வீரர்களை அனுப்பவும் முடியும். ஆகவே தமிழ் மக்கள் தமக்கான மாற்றுவழியைத் தெரிவுசெய்து தீவிரமாக, நிதானத்துடன் செயற்படவேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதையே நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

**இரணியன்**

# வடகிழக்கு தமிழர் தாயகம் – தமிழ்க் கட்சிகள் ஒன்றிணையவேண்டியது காலத்தின் கட்டாயம்



இன்றைய அரசியல் சூழ்நிலையில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. சமல் ராஜபக்ஷ. பசில்ராஜபக்ஷ. நாமல்ராஜபக்ஷ ஆகியோர் இந்நாட்டில் மீண்டும் தமது குடும்ப ஆட்சியைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளனர். ஹிட்லரின் சர்வாதிகார ஆட்சியைப் போன்றதான ஆட்சியைக் கொண்டுவருவதற்காகவே 20ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்ப்படுத்தி. இந்த நாட்டில் பயங்கரவாதப் பிரச்சினையே நீண்டகாலமாக இருந்தது என்று கூறி. தமிழ் மக்களுக்கான இனப்பிரச்சினையை சர்வதேச மட்டத்திற்கு எடுத்துச்செல்வதை விரும்பாத அரசாங்கம். இவ் விடயம் என்பது உள்நாட்டுப் பிரச்சினை என முடிவுக்குக் கொண்டுவர தற்போதைய அரசும் தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

1983 - 2009 வரை இந்த நாட்டில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் இன. மத. மொழி ரீதியாக தமது இனவாதத்தை விதைத்துக்கொண்டே வந்தனர். பின்னாட்களில் இவையே தமிழினமும். சிங்கள இனமும் மோதிக்கொள்ளக் காரணங்களாக அமைந்தது.

தற்போது ஐந்து மாகாணங்களாக மட்டும் இலங்கையைப் பிரித்து ஆட்சிக் கொண்டு செல்லும் நடவடிக்கையை இலங்கையரசு மேற்கொண்டு வருகிறது. ஒருபுறத்தில் மௌனமானப் போராக தொல்பொருள் ஆராய்ச்சிகள். புராதன இடங்களை அடையாளப்படுத்துகின்றோம் என்கிற பெயரில் தமிழர் பிரதேசங்கள் சுரண்டப்படுகிறது. இன்றைய சூழலில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒரு குடையின் கீழ் இணைந்து பயணிக்க வேண்டியதேவை ஏற்பட்டிருக்கிறது. எமது விடுதலைக்கானப்போர் தொடர்ந்தும் இந்த நாட்டில் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற போது சிங்களப் பேரினவாத அரசுகள் எல்லாம் எம்மினத்தை பயங்கரவாதிகள் என்றே பார்த்துவந்தனர் . பார்த்து வருகின்றனர். தற்போது நாட்டில் யுத்தமற்ற ஒரு சூழ்நிலையில் சமாதான அமைப்புக்கள் ஊடாக நல்லிணக்கச் செயற்பாடுகளை பேணுவதன் ஊடாகவே சிங்கள. தமிழ். முஸ்லீம் மக்கள் அனைவரும் சமத்துவமாக வாழக்கூடிய சூழல் இந்நாட்டில் உருவாகும்.

ஆகவே வடகிழக்கில் வாழ்கின்ற மக்களுக்கு 20ஆவது திருத்தச்சட்டம் என்பது பாரிய அழிவையே தரப்போகின்றது என்று கூறலாம். இந்த நாட்டில் 13ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தினாலே மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்கள் அந்தந்த மாகாண சபைகளுக்குக் கிடைக்கும் என அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஆகவே வடகிழக்கில் வாழ்கின்ற தமிழ் அரசியல் கட்சிகள். அரசியல் தலைமைகள் அனைவரும் ஒன்றிணைவதன் ஊடாகவே தமிழ் மக்களுக்கான அரசியல்த் தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மீண்டுமொரு யுத்தம் இந்நாட்டில் இடம்பெறாத வகையில். தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் தொடராத வகையில். அரச ஒட்டுக்குழுக்களாகச் செயற்படுகின்ற தமிழ் அரசியல்க் கட்சிகள் அரசாங்கம் கூறுகின்ற ஒவ்வொரு விடயங்களுக்கும் தலைசாய்க்காது தமிழினத்தின் நன்மை கருதி செயற்படவேண்டும். இத்தகையதொரு சூழலில் வடகிழக்கு பிரிந்து இருப்பது என்பது அல்லது இணைந்த வடகிழக்கு தொடர்ந்தும் பிரிந்து இருப்பது என்பது அரசியல் ரீதியாகவும். மாகாணத் தேர்தல் முறைமையிலும் பாரிய சிக்கல்களை உருவாக்கும்.

ஆகவே தமிழ் அரசியல்வாதிகள் இதனை நன்கு சிந்தித்து ஒரு கூட்டுமுயற்சியாக இனிவரும் காலங்களில் செயற்படவேண்டும். அவ்வாறு செயற்பட்டால் மாத்திரமே தொடர்ந்தும் வடகிழக்கில் தமிழ் மக்கள் தலைநிமிர்ந்து வாழலாம்.

# தமிழ் மக்களிடமிருந்து அகற்றப்பட முடியாதிருப்பதே எனது அணுகுமுறைக்கு கிடைத்த வெற்றி – அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிகாட்டு!



தமிழ் மக்களின் அரசியலில் இருந்து அகற்றப்பட முடியாத ஒரு கட்சியாக ஈ.பி.டி.பி இருப்பதே எமது அணுகுமுறைக்கு கிடைத்த வெற்றியாகவே கருதுகின்றேன் என தெரிவித்துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமா டக்ளஸ் தேவானந்தா. இதனை அண்மைக்காலங்களில் புதிதாக அரசியலுக்கு வந்தவர்கள் புரிந்து கொண்டு செயற்படுவது அனைவருக்கும் ஆரோக்கியமான எதிர்காலத்தை ஏற்படுத்தும் என்று தான் நம்புகின்வதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியின் போது குறித்த ஊடகவியலாளர் அண்மைக் காலமாக ஏனைய அரசியல் தரப்பினரையும் அரவணைத்துச் செல்லுகின்ற புதிய அணுகுமுறையை வெளிப்படுத்துகின்றீர்கள் இதர தரப்பினரை முன்னிலைப்படுத்தவது அரசியல் ரீதியில் உங்களுக்கு பின்னடைவை ஏற்படுத்துவதாக அமையாதா? என எழுப்பியிருந்த கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் அண்மைக் காலமாக என்று சொல்ல முடியாது. மக்கள் நலச் செயற்பாடுகளில் கொள்கை வேறுபாடுகளுக்கு அப்பால் அனைத்துத் தமிழ் தரப்பினரும் இணைய வேண்டும் என்பதையே தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றேன். சக அரசியல் தலைமைகளைப் பலவீனப்படுத்தி. சக கட்சிகளின் வேலைத் திட்டங்களை மலினப்படுத்தி. கால்தடங்களைப் போட்டு எனது கட்சியின் செல்வாக்கை உயர்த்திக் கொள்ள முடியும் என்பதை நான் என்றும் நம்புவதில்லை. அவ்வாறு நம்பியவர்கள் பலர் அரசியல் அரங்கில் இருந்து மக்களினால் ஓரங்கட்டப்பட்டு விட்டார் என்றும் சிலர் சுயத்தை இழந்து ஏனையவர்களின் வரலாறுகளுக்குள் புகுந்து கொண்டு மாறுவேடத்தில் மக்கள் மத்தியில் நடமாட முயற்சிக்கின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.அண்மையில் இடம்பெற்ற யாழ். வெளி மாவட்டங்களுக்கான தனியார் பேருந்து நிலையத்தின் திறப்பு விழாவின் போது பிரதம விருந்திராக நான் இருந்த போதிலும். நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனை தேசியக் கொடியை ஏற்றுமாறும் அதே போன்று ஆளுநர் திருமதி சார்ள்சை பெயர்ப் பலகையினை திரை நீக்கம் செய்யுமாறும் யாழ். முதல்வர் மணிவண்ணனை நாடாவை வெட்டி வைக்குமாறும் அழைத்திருந்தேன். இந்த நிகழ்வு உங்களின் அவதானத்தினை ஈர்த்த அண்மைய நிகழ்வாக இருக்கின்றது என்று நினைக்கின்றேன்.

ஆனால் இந்த அணுகுமுறையை நான் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றேன். ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட காலத்தில்கூட. பல்வேறு இயக்கங்கள் செயற்பட்டுக் கொண்டிருந்த நிலையில். கொள்கைகளை அடைந்து கொள்வதற்கான வழிமுறைகளில் எமக்கிடையே வேறுபாடுகள் காணப்பட்டாலும். மக்கள் நலச் செயற்பாடுகளில் அனைத்து இயக்கங்களும் இணைந்து செயற்பட வேண்டும் என்ற வேலைத் திட்டத்தினை மேற்கொண்டிருந்தேன். பின்னர் தேசிய நீரோட்டத்தில் இணைந்து நாடாளுமன்ற பொறிமுறைக்கு ஊடாக தேசிய நல்லிணக்க அரசியலில் கால் பதித்த பின்னரும். மக்களுக்கான அபிவிருத்தி போன்ற வேலைத் திட்டங்களில் அரசியல் கொள்கைகளுக்கு அப்பால் அனைத்து தரப்பினரும் இணைந்து பயணிக்க வேண்டும் என்ற கருத்தினை முன்னிலைப்படுத்தி வந்திருக்கின்றேன்.

அதன் வெளிப்பாடாக. யுத்தம் நிறைவடைந்த பின்னர் ஏற்பட்ட புதிய சூழலில் தமிழ் அரங்கம் என்ற கட்சிகளை ஒன்றுபடுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறித்த தேவையை அனைத்து தரப்பினரும் ஏற்றுக் கொண்டிருந்த போதிலும் தேர்தல் நெருங்கியவுடன். வாக்குகளை இலக்கு வைத்த சுயலாப அரசியல் காரணமாக யாரும் வெளிப்படைத் தன்மையுடன் அதற்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை. ஆனால் என்னுடைய இந்த நல்லெண்ணச் சிந்தனையை புரிந்து கொள்ளாமல் இதனை என்னுடைய பலவீனமாக கருதி சில தரப்பினர் செயற்படுகின்ற போது தான் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. அவ்வாறு தவறான புரிதல்களை கொண்டிருப்பவர்களுக்கு அவர்கள் புரிந்துகொள்ளக் கூடிய மொழியில் புரிய வைக்க வேண்டிய தேவையும் ஏற்படுகின்றது.

அத்துடன் காலத்திற்கு காலம் எனக்கு கிடைக்கின்ற அதிகாரங்களையும் வாய்ப்புக்களையும் பயன்படுத்தி மக்களுக்கு செய்யக் கூடியவற்றை செய்து கொண்டிருகின்றேன். இதுதான் இன்றுவரை எனக்கான முகவரியை நிலைக்கச் செய்து கொண்டிருக்கின்றது.

அந்தவகையில் அண்மைய தேர்தலில் நான் எதிர்பார்த்த அல்லது மக்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகள் அனைத்தையும் அணுகக்கூடிய அதிகார பலத்தை மக்கள் தரவில்லை என்ற மனத் தாக்கம் எனக்கு தனிப்பட்ட முறையில் இருக்கின்ற போதிலும். தமிழ் மக்களின் அரசியலில் இருந்து அகற்றப்பட முடியாத ஒரு கட்சியாக ஈ.பி.டி.பி இருப்பதே எமது அணுகுமுறைக்கு கிடைத்த வெற்றியாகவே கருதுகின்றேன். இதனை அண்மைக்காலங்களில் புதிதாக அரசியலுக்கு வந்தவர்கள் புரிந்து கொண்டு செயற்படுவது அனைவருக்கும் ஆரோக்கியமான எதிர்காலத்தை ஏற்படுத்தும் என்று நம்புகின்றேன் என்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் உயர்பீடம் விழித்துக் கொள்ளுமா?

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் முஸ்லிம் சமூகம் பல சொல்லொன்னா துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருப்பதைப்பார்க்கலாம். இதில் இன்று சமூகத்தை பெரும் துயரில் ஆழ்த்தியிருக்கும் சம்பவமாக ஜனாஸா எரிப்பு விடயம் காணப்படுகின்றது. தற்போதைய அரசாங்கம் ஜனாஸா எரிப்பு விடயத்தில் உலகநியதிகளையும் புறக்கணித்து நடந்துகொள்வதைப் பார்க்கலாம். (கொரோனாவில் மரணிப்பவர்களின் ஜனாஸா அடக்கம் செய்வதற்கான வர்த்தமானி இதுவரை வெளியிடப்படவில்லை) கடந்த காலத்தேர்தலில் முஸ்லிம் சமூகத்தை இலக்கு வைத்து இனவாதத்தினூடாக ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். இவ்வாட்சியில் நிறைவேற்று அதிகாரத்தை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் அரசியல் அமைப்பில் 20வது திருத்தம் கொண்டு வரப்பட்டது. இதன் போது பலரும் இவை ஜனநாயத்திற்கு விரோதமானதென விமர்சனங்கள் செய்ததும், இவ்வதிகாரங்கள் சிறுபான்மையினருக்கு எதிராகவே எதிர்காலத்தில் பயன்படுத்தப்படுமென எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டதையும் பார்க்கலாம்.

20வது அரசியலமைப்புத்திருத்தமானது ஜனநாயக விடயங்களை இல்லாது செய்து சர்வதிகாரத்தை நோக்கி நாட்டைக் கொண்டு செல்வதற்கானதென நீதி மன்றம் சென்று தங்களின் ஆட்சேபனைகளை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் முன்னெடுத்திருந்ததும், 18வது திருத்தத்திற்கு ஆதரவு வழங்கி தாங்கள் செய்த தவறுக்கான பிராயச்சித்தமாகவே ஜனநாயகத்தைப் பலப்படுத்தும் நோக்கில் அரசியலமைப்பில் கொண்டு வரப்பட்ட 19வது திருத்தத்திற்கு ஆதரவளித்ததாகவும் குறிப்பிட்டதை இச்சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்துகிறேன்.

ஆனாலும், முஸ்லிம் காங்கிரஸின் தலைவரின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாது, கட்சியின் உயர்பீட அனுமதியின்றி, கடந்த வருடம் நிறைவேற்றப்பட்ட 20வது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் தவிர்ந்து ஏனைய நான்கு உறுப்பினர்களும் ஆதரவு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. ஆளுங்கட்சிலுள்ள சில பாராளுமன்ற உறுப்பினர்கள் இத்திருத்தத்திற்கெதிரான நிலைப்பாட்டை எடுத்திருந்த நிலையில், 20வது அரசியலமைப்புத்திருத்தம் 2/3 பெரும்பான்மையால் நிறைவேற்றப்படுவது சந்தேகமாக இருந்த நிலையில், முஸ்லிம்களின் ஆதரவு தேவையில்லையெனக்கூறிய அரசாங்கத்திற்கு முஸ்லிம் பாராளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களில் முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர்கள் தவிர்ந்து உறுப்பினர்கள் ஆதரவு வழங்கி 20வது திருத்தத்தை நிறைவேற்றி அரசாங்கத்திற்கு பலம் சேர்த்தனர்.

அதன் விளைவுகளை இன்று முஸ்லிம் சமூகம் அனுபவித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம். கட்சியின் அனுமதி பெறாது, தலைவரின் கோரிக்கையை நிராகரித்து இப்பாதகச் செயலுக்கு துணை போன முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்களுக்கெதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கையை கட்சி மேற்கொள்ள வேண்டுமென்ற எதிர்பார்ப்பு இக்கட்சியின் ஆதரவாளர்கள், போராளிகள் மத்தியில் இருந்து அண்மைக்காலமாக வெளிப்படுத்தி வருவதைப் பார்க்கலாம். இந்த நிலையில், இவ்வாரம் முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடம் கூடவுள்ளதாகவும், இவ்விடயம் தொடர்பில் பேசப்படவிருப்பதாகவும், அண்மையில் தலைவர் ரவூப் ஹக்கீமினால் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது. இச் சந்தர்ப்பத்திலேயே உயர்பீட உறுப்பினர்களை நோக்கி பல எதிர்பார்ப்புகள் திரும்பியிருப்பதைப் பார்க்கலாம். மர்ஹூம் பெரும் தலைவர் அஷ்ரப் காலத்தில் கட்சியின் உயர்பீட உறுப்பினர்களின் எண்ணிக்கை சுமார் 36 பேருக்கு உட்பட்டதாகக் காணப்பட்டது. கட்சி ஒழுக்கக்கோவை மிகப்பலமாகக் காணப்பட்டது. உயர்பீடத்திற்கென்று ஒரு கௌரவம் அன்று கட்சியிலும், மக்கள் மத்தியிலும் இருந்தது. கட்சிக்கு, தலைமைக்கு கட்டுப்படாதவர்கள் தன் நெருங்கிய நண்பர்கள் அல்லது இக்கட்சியின் வளர்ச்சிக்காக பாடுபட்டவர்களாக இருந்தாலும், கட்சியை விட்டு நீக்கும் அதிகாரத்தை தலைவர் பயன்படுத்தியதை யாரும் மறப்பதற்கில்லை. இவ்வாறு கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டவர்கள் காலப்போக்கில் அரசியல் அநாதையானது தான் வரலாறு. அவரின் மறைவின் பின்னர் பேரினவாதிகளின் திட்டமிட்ட அடிப்படையில் காலத்திற்குக்காலம் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களைப் பிரித்தெடுத்து கட்சியைப் பலவீனப்படுத்தும் செயற்பாடுகள் இன்று வரை இடம் பெற்று வருவதைப்பார்க்கலாம் தற்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர்களின் எண்ணிக்கை 100யும் தாண்டிச் செல்வதைப்பார்க்கலாம்.

ஆனாலும், உயர்பீடக்கூட்டங்களில் அதிகமானவர்கள் கலந்து கொள்வதில்லை என்பதோடு, கலந்து கொள்பவர்களில் ஒரு சிலரே கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் நிலையே காணப்படுகிறது. ஆரம்ப காலத்தில் உயர்பீடத்திற்கு மக்கள் மத்தியில் இருந்த மதிப்பு கடந்த கால உயர்பீடச் செயற்பாடுகளால் மலினப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகிறது. இவ்வாறான சூழ்நிலையிலேயே 20வது திருத்தத்திற்கு ஆதரவளித்த விவகாரம், அரசாங்கத்தின் ஜனாஸா எரிப்பு விவகாரம் போன்றவைகளால் நொந்து போயிருக்கும் சமூகம், அரசாங்கத்துக்குத் துணையாக 20க்கு கையுயர்த்தி அரசாங்கம் ஜனாஸாக்களை தொடர்ந்து எரிப்பதற்கு துணை போனவர்கள் தொடர்பில் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள். அதற்காக ஒவ்வொரு உயர்பீட உறுப்பினர்களும் எரியும் ஜனாஸாக்களின் பேரில் சமூக உணர்வோடு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து நடைபெறவிருக்கும் உயர்பீடத்தில் கருத்துச்சொல்லிஒரேநிலைப்பாட்டில் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள். உயர்பீடம் மக்கள் உணர்வுகளுக்கு மதிப்பளித்துதங்களின்கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்ளுமா?

அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களித்த 4 பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில், இவர்கள் ஏன் வாக்களித்தோம் என்பதற்கு விளக்கமளிக்க வேண்டும். தற்போது அவர்கள் அரசாங்கத்தில் இருக்கிறார்களா? அல்லது எதிர்கட்சியில் இருக்கிறார்களா? என்பதைத்தெளிவுபடுத்த வேண்டும். மிக முக்கியமானது, அவர்கள் முஸ்லிம் காங்கிரஸில் அதன்




தலைவருடன் இருக்கிறார்களா? என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். இன்று அரசாங்கம் பெரும் அளவான அபிவிருத்திக்கு நிதிகளை ஒதுக்கி தங்களுக்கு ஆதரவாக வாக்களித்த இவர்களுக்கு வழங்கப்படுவது மற்றும் ஒரு சிலர் அமைச்சு கிடைக்கவிருப்பதாகவும் கூறப்படுகிறது. இதன் உண்மைத் தன்மைகளை தெளிவுபடுத்த வேண்டும். இவர்கள் தங்களின் தவறுகளை ஒத்துக்கொள்ளும் பட்சத்தில் பகிரங்க மன்னிப்புக் கோருவதுடன், உடன் அமுலுக்கு வரும் வகையில் கட்சியில் இவர்கள் வகிக்கும் பதவிகளை பறிக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் மீண்டும் யாரும் செய்திடாது தடுப்பதற்கும் இதனை முன்னுதாரணமாக யாரும் எடுத்துக் கொள்ளாது இருப்பதற்குமாக இவ்வாறான மிகப்பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எதிர்க்கட்சியிலும், இவர்கள் 4 பேரும் ஆளும் கட்சியுடன் இணைந்து செயற்படுவதென்பது முஸ்லிம் அரசியலை பெரும்பான்மை மக்கள் மத்தியில் நகைப்புக்குள்ளாக்கியிருக்கிறது. தலைவர் சொல்லியும் கேட்காது 20க்கு வாக்களித்தல், பாராளுமன்ற ஒதுக்கீட்டு சட்டமூல விவாதத்தின் போது, ரவூப் ஹக்கீம் பகிரங்கமாக தனது கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தற்போதாவது தலைவருடன் நில்லுங்கள் எனக்கூறப்பட்டும்அவற்றைநிராகரித்து அரசாங்கத்தை திருப்திப்படுத்தும் வகையில் நடந்து கொண்டமை.

ஜனாஸா விவகாரத்தில் தமக்கு வாக்களித்த மக்களின் உணர்வுகளை ஜனநாயக ரீதியில் வெளிப்படுத்தும் நடவடிக்கைகளில் சமூகத்தை வழிநடாத்த வேண்டியவர்கள் அரசாங்கத்தின் கோபத்திற்கு ஆளாகக்கூடாது என்பதற்காக தவிர்ந்து கொண்டமை. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையில் சகோதர தமிழர்கள் ஏற்பாடு செய்த முஸ்லிம் ஜனாஸா விவகாரம் உள்ளடக்கியதான போராட்டத்தில் கலந்து கொள்ள கட்சித்தலைவர் ரவூப் ஹக்கீம் தன் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கியும், அவற்றை நிராகரிக்கும் வகையில் கலந்து கொள்ளாமை. இப்படித்தலைவரைப் புறக்கணித்துச் செயற்படும் உறுப்பினர்களை இணைத்துக்கொண்டு எவ்வாறு அரசியலை முன்னெடுத்துச் செல்வது? தலைவர் ஒரு பக்கம், கட்சி ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்னுமொரு பக்கம் எனச்செல்வது அழகாகவா இருக்கிறது. இது ஒரு கட்சியின் ஒழுக்கத்தையே கேள்விக்குறியாக்கியிருக்கிறது. ஒன்று தலைவருடன் சேர்ந்து ஆளும் தரப்புடன் இணைந்து செயற்படுங்கள் அல்லது எதிர்த்தரப்புடன் இணைந்து செயற்படுங்கள்மாறாகஇந்தஇரண்டுங் கெட்ட நிலையை கைவிடுங்கள். சமூகத்தைப் பழியாக்காதீர்கள். இன்று முஸ்லிம் சமூகம் பெரும் ஆபத்தை பேரினவாதிகளால் எதிர்நோக்கி வருகிறது. இதன் போது முஸ்லிம் சமூகத்தை ஜனநாயக வழியில் தலைவர்கள் வழிநடாத்த வேண்டுமே தவிர, சகோதர இனத்தவர்களின் போராட்டத்தின் பின்னால் மறைந்து செல்வது அழகல்ல.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இவ்வாறான பலவீனங்களை கட்சிக்குள் தொடர்ந்து வைத்துக் கொண்டு சமூக உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முற்படுவது வெற்றியளிக்காது என்பதுடன், மேலும் சமூகத்தை பலவீனப்படுத்தும் என்பதை கவனத்திற்கொள்ள வேண்டும். இரண்டு தோணிகளில் கால் வைத்துக்கொண்டு இலக்கை அடைய முடியாதென்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். மர்ஹூம் அஷ்ரப் அவர்களின் மரணத்தைத் தொடர்ந்து ஒவ்வொரு பாராளுமன்றத்தேர்தலின் பின்னர் வெற்றிபெற்ற உறுப்பினர்களை ஆளும் கட்சி பக்கம் தாவாது பாதுகாப்பது தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு பெரும் பணியாக இன்று வரை இருந்து வருகிறது. இவ்வாறான கேவலமான அரசியல் போக்கினை கட்சிக்குள் இனியும் தொடர விடாது, முதுகெலும்புடன் உயர்பீடம் செயற்பட வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

மாறாக, கடந்த காலம் போல் அமைதியாக இந்த சூழ்நிலையிலும் இருந்து விட்டு வருவீர்களாக இருந்தால், அல்லது4உறுப்பினர்களின் செயலை நியாயப்படுத்துவதன் மூலம் எதையாவது சலுகைகளை எதிர்காலத்தில் அவர்களிடமிருந்து பெறலாம் என்று நினைப்பீர்களாக இருந்தால், நீங்களும் அவர்களின் செயல்களுக்கு துணை போய் மறைமுகமாக இந்த அரசாங்கத்தின் செயல்களை ஆதரிப்பதாகக் கருதப்படும். ஒரு சமூகத்தின் கண்ணீருக்கும், பழிச்சொல்லுக்கும் ஆளாக வேண்டாமென தயவாக உயர்பீட உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஹானியன்

# ஐ.நா சபையின் கூட்டத்தொடரும் தமிழ் மக்களின் தீர்வுக்கான சாதக பாதக தன்மைகளும்



ஐ.நா மனித உரிமை பேரவையின் 46வது கூட்டத்தொடர் வரும் பெப்ரவரி மாதம் 22 தொடக்கம் மார்ச் மாதம் 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நிலையில் இக் கூட்டத்தொடரானது கடந்த காலங்களில் வந்த தொடராக இல்லாமல் இலங்கை மீது சற்று அழுத்தங்கள் அதிகரிக்கும் என்ற நிலை காணப்படுகின்றது. இலங்கையில் சிறுபான்மை தமிழினம் தனது தன்னாட்சி சுய உரிமைக்கான போராட்டத்தை அகிம்சை ஆயுத ரீதியாக கடந்த 50 ஆண்டுகாலமாக போராடி வருகின்றனர். இருந்த பொழுதிலும் பௌத்த மேலாதிக்க சிந்தனையும் பெரும்பான்மை என்ற ஆணவத்துடனும் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் ஆட்சிக்கு வரும் தென்னிலங்கை தலைமைகள் தமிழ் மக்களை அடக்கி அடிபணிய வைத்து தமது மேலாதிக்க நிலையை உருவாக்கி வருகின்றனர். 1958 ஆம் ஆண்டிற்கு பின்னர் தமிழர்கள் தமது உரிமைக்கான தீர்வை பெற அகிம்சை ரீதியாக பல போராட்டங்களை இலங்கை இனவாத தலைமைகளுக்கெதிராக மேற்கொண்ட பொழுதிலும் பௌத்த மேலாதிக்க சிந்தனை கொண்ட தென்னிலங்கை தலைமைகள் அதனை மிருகத்தனமாக அடக்கியது. இவர்களுடன் அகிம்சை ரீதியாக பேசி பயனில்லை எனப் புரிந்துகொண்ட தமிழினம் ஆயுத பலம் கொண்டு போராடியது.

இலங்கை என்ற ஒரு சிறிய நாட்டை தனது சுயநல பிராந்திய நலனுக்காக தனது காலடியில் வைத்திருக்க எப்பொழுதும் விரும்பும் உலக வல்லரசு என சொல்லிக்கொள்ளும் நாடும் உலகின் மிகப்பெரும் ஜனநாயக நாடான இந்தியா இலங்கையை மிரட்டி பணிய வைக்க ஓர் துரும்பு சீட்டாக இலங்கையின் வடகிழக்கு தமிழர்களை அது பயன்படுத்த தொடங்கியது. வடகிழக்கில் உள்ள தமிழ் இளைஞர்களை முறுக்கேற்றி உசுப்பேற்றி ஆயுதங்களையும் வழங்கி பயிற்சிகளையும் கொடுத்து தென்னிலங்கை பௌத்த பேரினவாத தலைமைகளுடன் மோதவிட்டு இலங்கையை தனது காலடியில் வைத்திருக்க மேற்கொண்ட முயற்சியில் ஆரம்பத்தில் அது வெற்றி கண்டது. ஆனால் இந்தியாவின் பிராந்திய நலன் என்ற சூழ்ச்சி வலைக்குள் விடுதலைப்புலிகள் அமைப்பு சிக்கவில்லை. தமிழ் மக்களுக்காக அவர்களின் உரிமைக்காக போராட ஆரம்பித்த ஏனைய தமிழ் போராட்ட அமைப்புக்கள் இந்தியாவின் சுயநல பிராந்திய வலைக்குள் சிக்கி சின்னாபின்னமாகின. விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டம் ஓர் தீர்க்கமான கட்டத்தை அடையும் பொழுதெல்லாம் தென்னிலங்கை அரசியல் தலைமைகள் இந்தியாவின் காலடியில் விழுந்து தமிழர்களின் போராட்டத்தை சிதைக்க முயற்சித்து அதில் வெற்றி கண்டனர். இலங்கை எப்பொழுதும் தன் காலடியில் கிடக்கும் மட்டும் தனது பிராந்திய பாதுகாப்புக்கு பிரச்சனை இல்லை என்ற நிலைப்பாட்டில் தமிழர்களின் சுய உரிமைப் போராட்டத்தையும் அவர்களது தன்னாட்சிஉரிமைக்கானபோராட்டத்தையும் முள்ளிவாய்க்கால் மண்ணில் எந்த பேரினவாத கொள்கையுடைய நாட்டை தனது காலடியில் வைத்திருக்க வேண்டும் என்பதற்காக ஆயுதப் போராட்ட அமைப்புகளை தமிழ் மண்ணில் உருவாக்கியதோ அதே பேரினவாத அரசுக்கு உதவி புரிந்து அப்பாவி தமிழ் மக்களையும் போராளிகளையும் முள்ளிவாய்க்கால் மண்ணில் புதைத்தது.

2009 ஆம் ஆண்டு உலகிலேயே இடம்பெறாத வகையில் ஓர் பெரும் மனித பேரவலம் இடம்பெற்றது. உலக யுத்தங்களில் பாவிப்பதற்குதடைவிதித்த குண்டுகளைக் கூட இந்தியா வழங்கி தமிழ் மக்களை கொன்று குவிக்க உதவி செய்தது. சீனா, பாகிஸ்தான், அமெரிக்கா போன்ற நாடுகளும் இறுதிப் பேரவலத்துக்கு உதவி செய்தன. சரணடைந்த போராளிகள் மற்றும் பொதுமக்கள் இலங்கை படைகளால் கொல்லப்பட்டனர். பல பேர் காணாமல் ஆக்கப்பட்டு இன்றுவரை அதற்கு ஓர் முடிவு இல்லாத நிலையிலும் யுத்தக் குற்றங்களில் ஈடுபட்ட படையினருக்கு எதிரான நடவடிக்கைகள் இன்றளவும் இடம்பெறவில்லை. வருடா வருடம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கூட்டத்தொடர்கள் வந்துபோன நிலையிலும் இறுதிப் பேரவலத்துக்கான நீதி இன்றளவும் கிடைக்கவில்லை இந்நிலையில் 2021 வர இருக்கும் ஐ.நா மனித உரிமை பேரவையின் 46 வது கூட்டத்தொடரானது தமிழ் மக்கள் பெரிதும் எதிர் பார்ப்புடனும் இந்த தொடரிலாவது ஓர் விடிவு கிடைக்கும் எனவும் எதிர் பார்ப்புடன் உள்ளனர். இறுதி போரில் ஏற்பட்ட அழிவுகளுக்கு காரணமாகவும் அதற்கு அனுமதி வழங்கி அதனை செயற்படுத்தியவர்கள் இன்று ஆட்சியில் உள்ளனர். அத்துடன் இறுதிப் போரில் பாதுகாப்பு செயலாளராக இருந்த கோட்டபாய ராஜபக்ச அவர்கள் தற்பொழுது ஜனாதிபதியாக உள்ளார். போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக கூறப்படும் தளபதிகள் இன்று கோட்டபாயவின் ஆட்சியில் பலர் பெரும் பதவிகளில் காணப்படுகின்றனர். கோட்டபாய அவர்கள் பதவியேற்றதை தொடர்ந்து தமிழர் பிரதேசம் எங்கும் இராணுவ நிலைகள் உருவாக்கப்பட்டு ஓர் இராணுவ அச்சுறுத்தல் தமிழர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் தமிழர் பிரதேசங்களில் தொன்மையான பல இடங்களை தொல்பொருள் ஆராய்ச்சி எனக் கூறி அவற்றை சிதைக்கும் நிலை காணப்படுகின்றது. பல மேய்ச்சல் தரைகளை அபகரித்து சிங்கள குடியேற்றங்களை உருவாக்குதல் இராணுவப் பாதுகாப்புக்கென அபகரிக்கப்பட்ட நிலங்களை விடுவிக்க முடியாது என கூறுவது கொரோனா நோய் தொற்றால் மரணிக்கும் முஸ்லிம் மக்களின் ஜனாசாக்களை அவர்களது சமய முறைப்படி அடக்கம் பண்ணாமல் வேண்டுமென்றே தனது பேரினவாத கொள்கையின் நிமித்தம் அவ்வுடல்களை எரிப்பது என பல கொடூர செயல்பாடுகளை அரங்கேறி வருகின்றன.

இந்நிலையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஐ.நாமனிதஉரிமைபேரவை கூட்டத்தொடரில் தமிழர் தரப்பானது தமது சுயநல அரசியல் தேவைக்காக தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்களை ஐ.நா மனித உரிமை பேரவையில் தனித்தனியாக தமது அறிக்கைகளை சமர்ப்பித்த நிலையில் அவ் அறிக்கைகளின் பிரகாரம் இலங்கை அரசுக்கு கால அவகாசங்களை தமிழர் தரப்பே வேண்டிக்கொடுத்தது. இம்முறை இடம்பெறும் 46 வது கூட்டத்தொடரில் தமிழ் கட்சிகள் ஓரணியில் நின்று ஓர் வரைபை ஐ.நா மனித உரிமை பேரவைக்கு சமர்பித்துள்ளனர். அத்துடன் கூட்டத்தொடர் இடம்பெறவுள்ள நிலையில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான தொடர் போராட்டங்கள் நடத்தி தமது பக்க நியாயத்தன்மையை உலக அரங்கிற்கு பறை சாற்றியுள்ளனர். இந்த பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான போராட்டத்துக்கு முஸ்லிம் மக்களும் தமது பலத்த ஆதரவை தெரிவித்தமையானது இங்கு உற்று நோக்க தக்கது. இந்நிலையில் வரும் ஐ.நா மனித உரிமை கூட்டத்தொடரை எவ்வாறு இலங்கை எதிர்கொள்ளப் போகின்றது. என்பதே பலரது எதிர்பார்ப்பாகும். சென்ற கூட்டத்தொடர்களில் எல்லாம் இலங்கைக்கு ஏற்பட இருந்த நெருக்கடிகளிலிருந்து இந்தியா சீனா பாகிஸ்தான் போன்ற நாடுகள் காப்பாற்றி இருந்த நிலையில் வரும் கூட்டதொடரில் இவ் நாடுகள் எவ்வாறன நிலைப்பாட்டை எடுக்கப்போகின்றன என தமிழர் தரப்பு எதிர்பார்த்த நிலையில் தற்பொழுது இந்தியா இலங்கையினூடான உறவில் விரிசல் ஏற்படத்தொடங்கியுள்ளன. குறிப்பாக கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையப்பகுதி இந்தியாவுக்கு கொடுக்கப்பட்ட நிலையில் அதற்கு தென்பகுதியில் ஏற்பட்ட எதிர்ப்பு காரணமாக அந்த கிழக்கு முனையம் இலங்கை அரசு தன்னகத்தே அதனை கொண்டுள்ளது. இந்தியாவிற்கு அதனை கொடுக்க மறுத்துள்ளது. இதனால் இந்தியா கடும் அதிர்ப்தியில் உள்ளது இதனையடுத்து இந்தியா இலங்கைக்கு வழங்கிய அந்நிய செலாவணி சலுகையின் கீழ் வழங்கப்பட்ட 400 மில்லியன் அமெரிக்க டொலரை உடனடியாக திருப்பி தருமாறு கோரியிருந்தது. அரசானது உடனடியாக சீனாவிடம் 1500 மில்லியன் அமெரிக்கா டொலரை பெற்று இந்தியாவின் 400 மில்லியன் அமெரிக்க டொலரை திருப்பி செலுத்தி கிழக்கு முனையம் இந்தியாவுக்கு இல்லை என்ற முடிவை ஆணித்தரமாக வழங்கியதுடன் இலங்கையின் சினேக பூர்வ நாடு சீனா தான் என அழுத்தமாக கூறியுள்ளது. அத்துடன் இங்கு சீனாவின் இராஜதந்திரம் வெற்றியடைந்துள்ளது. இதனால் மிகுந்த கோபமடைந்துள்ள இந்தியா இலங்கை எப்பொழுதெல்லாம் அந்நியப்பட்டு போகின்றதோ அப்பொழுதெல்லாம் இலங்கையை அடிபணிய வைக்க இந்தியா பயன்படுத்தும் ஓர் துருப்பு சிட்டு தான் இலங்கையில் வடகிழக்கு தமிழர்கள் அந்த வகையில் பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரை போராட்டம் பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவு தூபி இடித்தனிப்பு விவாகரத்தில் உடனடியாக கண்டனம் தெரிவித்தமை. இதில் ஒருபடி மேலே சென்று பொத்துவில் - பொலிகண்டி போராட்டத்துக்கு முஸ்லிம் மக்களையும் சேர்த்து கொண்டு இடம்பெற வைத்தமை என இந்தியாவின் இராஜதந்திர ஆட்டம் தொடங்கியுள்ளது. இதற்கும் இலங்கை அரசு அடிபணிய மறுத்தால் வரும் ஐ.நா மனித உரிமை கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை இந்தியா முன்வைக்கும் என எதிர்பார்க்கலாம்.


ஆனால் அது சாத்தியம் இல்லை என்றே இங்கு கூறலாம். ஏனெனில் ஐ.நா மனித உரிமை பேரவையில் இலங்கை எதிராக இந்தியா செயல்படுமாயின் யுத்தம் இடம்பெற்ற பொழுது இந்தியா இலங்கைக்கு எவ்வாறான உதவிகளை வழங்கியது என்பது தொடர்பான விடயங்கள் இலங்கை வெளியிடும் அத்துடன் இந்தியா அவ்வாறான இலங்கைக்கு எதிரான முடிவை எடுத்தால் அது சீனாவுக்கு மேலும் சாதகமாக அமையும். ஆகவே இந்தியா இக் கூட்டத்தொடரில் இலங்கையில் தமிழ் இளைஞர்களை முன்பு செயல்படுத்தியது போல ஓர் உசுப்பேற்றல் நடவடிக்கையை மேற்கொண்டு ஓர் அழுத்தத்தை அரசு மீது திணிக்கலாம். காலம் காலமாக இந்தியா மேற்கொள்ளும் இவ்வாறான நரித்தனமான செயல்பாட்டுக்கு இனியும் வடகிழக்கு தமிழ் மக்கள் ஏமாறாமல் புத்திசாலித்தனமாக இந்தியாவை அரவணைத்து இக் கூட்டத்தொடரில் இலங்கையை சிக்க வைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வெற்றி பெறுவதே சாதூர்யமான விடயமாகும். புலம் பெயர் தமிழர்கள் தமிழ் அமைப்புகள் எல்லாம் சுயநலங்களை களைத்து ஓர் அணியில் திரண்டு தமிழர்களுக்கான தீர்வை இம் மாநாட்டின் ஊடாக பெற முயற்சிக்க வேண்டும். தற்பொழுது அமெரிக்காவில் புதிய ஜனாதிபதியின் பதவியேற்பும் இடம்பெற்று ஜோ பைடன் அவர்கள் ஆட்சியில் உள்ள நிலையில் தற்பொழுது அமெரிக்காவும் இக் கூட்டத்தொடரில் எவ்வாறு செயல்பட போகின்றது என்பதே இங்குள்ள கேள்வியாகும். உலக அரங்கில் சீனாவின் பலம் நாளுக்கு நாள் அதிகரித்து செல்லுகின்றது. சீனாவும் அருகில் உள்ள மியான்மாரில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியானது சீனாவின் பங்கு இதில் மிக அதிகமாக உள்ளது. மியன்பாரில் பிரதமர் ஆன்சான் சுகியை பதவியில் இருத்துவதற்கு இந்தியாவும் அமெரிக்காவும் தான் முன்னணியில் இருந்தன.

ஆனால் பதவியேற்றவுடன் ஆன்சான் சுகி அவர்கள் சீனாவுடன் நட்புறவை பேணத்தொடங்கினர். ஆன் சான் சுகி அவர்களுக்கு முன்னர் மியன்மார் இராணுவம் சீனா இராணுவத்துடன் நட்புறவில் இருந்துள்ளது. ஆகவே இவ் இராணுவப் புரட்சிக்கு சீனா அடித்தளம் இட்டுள்ளது. இது இந்தியாவுக்கு அமெரிக்காவுக்கும் மிகப்பெரும் நெருக்கடியாகும். அத்துடன் 2019 ஆம் ஆண்டு ஒன்றாக போர் ஒத்திகையில் ஈடுபட்ட ரஸ்யா,ஈரான்,சீனா ஆகிய மூன்று நாடுகளும் தற்பொழுது 2021 ஆம் ஆண்டு மீண்டும் இணைந்து போர் ஒத்திகையில் ஈடுபட உள்ளதாக மூன்று நாட்டு தலைவர்களும் தெரிவித்துள்ளனர். இதுவும் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கு பெரும் நெருக்கடியான சூழ்நிலையாகும். ஓர் பக்கம் சீனா மறுபக்கம் பாகிஸ்தான் என இருபெரும் நெருக்கடியை சந்தித்து இந்தியா தற்பொழுது இலங்கை சீனா நட்புறவில் மும்முனை நெருக்கடியையும் சந்திக்க உள்ளது. இவ் விடயத்தில் தமிழர்கள் மற்றும் தமிழ் அரசியல் தலைமைகள் புலம்பெயர் தமிழர்கள் தமிழ் அமைப்புகள் தமிழகத்தில் உள்ள ஈழ உணர்வாளர்கள் இங்குள்ள முஸ்லிம் தலைமைகள் என அனைத்தும் ஓர் புள்ளியில் இணைந்து இந்நிலை மாறுகால அரசியலை கணக்கில் வைத்து சரியான திசையில் வரும் ஐ.நா மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பான போர்குற்ற விசாரணையை சரியான திசைக்கு எடுத்து சென்று வெற்றியடைவதே விடிவுக்காக ஏங்கும் சகல தமிழினத்தின் எதிர்பார்ப்பாகும். நீதி ஒருகாலும் சாகாது. நம்பிக்கையுடன் இருப்போம்.

தாயகத்தான்



# பிராந்தியச் செய்திகள்



## 2 இலட்சம் விவசாயிகளுக்கு இயற்கை பசளையை வழங்க தீர்மானம்

இம்முறை சிறு போகத்தில் 150,000 ஹெக்டேயர் நெற்செய்கைக்கு இயற்கை பசளையை வழங்குவுள்ளதாக உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமி நாசினி பாவனை இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்பிரகாரம் இரசாயன உரத்தை 30 வீதத்தால் குறைத்து அதற்கு பதிலாக இயற்கை பசளையை செய்கைக்காக வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சின் மேலதிக செயலாளர் மகேஸ் கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.

கடந்த இரு போகங்களிலும் முன்னெடுக்கப்பட்ட பரீட்சார்த்த நடவடிக்கைகள் வெற்றியளித்ததாக அவர் கூறியுள்ளார்.

இதற்காக 2 இலட்சம் விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டிருந்ததாக மகேஸ் கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இரசாயன உரத்தின் விலை குறித்து உடன்பாட்டை எட்டுவதற்காக, அமைச்சரவையினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை இராஜாங்க அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## பல்கலைக்கழக மாணவர்களுக்கும் கொரோனா தடுப்பூசி வழங்க நடவடிக்கை

பல்வேறு கட்டங்களின் கீழ் அனைத்து பல்கலைக்கழக மாணவர்களுக்கும் கொரோனா தடுப்பூசி வழங்குவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பிலான யோசனையை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கையளித்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.



இதனடிப்படையில், முதற் கட்டத்தில் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடம் மற்றும் பல் மருத்துவ பீடங்களில் பயிற்சிகளை பெற்றுக் கொள்ளும் மாணவர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன.

5,800 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இதன் கீழ் உள்ளதாகவும் பேராசிரியர் சம்பத் அமரதுங்க கூறியுள்ளார்.

இதனை தொடர்ந்து ஏனைய பல்கலைக்கழக மாணவர்களுக்கும் கொரோனா தடுப்பூசிகளை வழங்குமாறு சுகாதார அமைச்சிடம் கோரியுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் 140,000 மாணவர்கள் தற்போது கல்வி கற்கின்றனர்.

இதனிடையே, கொரோனா தொற்று நிலைமையால் அனைத்து பல்கலைக்கழகங்களும் மூடப்பட்டுள்ளதுடன் Online ஊடாக கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

## வடக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பு

வடக்கு மாகாணத்தில் மேலும் 4 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் இருவர், கிளிநொச்சியிலுள்ள மற்றொரு ஆடைத் தொழிற்சாலை பணியாளர்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் மேலும் கூறியுள்ளதாவது, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில், அன்று (சனிக்கிழமை) 340 பேரின் மாதிரிகள், பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன. அவர்களில் 4 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஆடைத் தொழிற்சாலை பணியாளர்கள் இருவர் அடையாளம்காணப்பட்டுள்ளனர். கரைச்சியிலுள்ள மற்றொரு ஆடைத்தொழிற்சாலையில் கடந்த வாரம் தொற்றாளர் அடையாளம் காணப்பட்டிருந்தார்.

மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொற்றாளருடன் நேரடித் தொடர்புடையவருக்கே இவ்வாறு தொற்று ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த வெளிநாட்டில் இருந்து வருகை தந்த ஒருவர் நெஞ்சுவலி காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவர் வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நாட்டை முடக்குவது தொடர்பில் தீர்மானம் இல்லை – இராணுவத் தளபதி

புதிய வகை கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதார ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர தெரிவித்துள்ளார்.

இந்த நடைமுறை தொடர்பில் கலந்துரையாடப்படுகின்றதாகவும் தேவையான விடயதானங்களை சுகாதாரப் பிரிவினருடன் கலந்துரையாடி எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.



நாட்டை முடக்குவதாக வதந்திகள் பரவுகின்றதாகவும் இதுவரை அவ்வாறான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டிய இராணுவத் தளபதி, எதிர்வரும் நாட்களில் வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய தகுந்த நடவடிக்கைகள், சுகாதார தரப்பினருடன் இணைந்து முன்னெடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விழாக்கள் ஏற்பாடு செய்வது மற்றும் அவற்றில் பங்குபற்றுவது தொடர்பில் மீண்டும் கலந்துரையாடி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதனை முன்னெடுத்துச் செல்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஆராய்ந்து புதிய திட்டங்களை வகுப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் இராணுவத் தளபது கூறியுள்ளார்.

## புலமைப்பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளி விவகாரம்: அறிக்கை ஜனாதிபதி செயலகத்தில் கையளிப்பு

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாடசாலை வெட்டுப்புள்ளிகள் தொடர்பிலான சிக்கல் குறித்து கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஜனாதிபதி செயலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளது.




வெட்டுப்புள்ளிகளை குறைப்பதில் காணப்படும் சிக்கல்கள் மற்றும் அதனை தவிர்ப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் ஆகிய அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர், பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது வெட்டுப்புள்ளி குறித்த பிரச்சினைக்கு தீர்வாகாது எனவும் அவர் கூறினார். அறிக்கையை ஆராய்ந்த பின்னர் ஜனாதிபதி செயலகத்தினால் இந்த பிரச்சினைக்கான தீர்மானம் எட்டப்படும் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதுவரை, புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலும் தரம் 6 இற்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பேராசிரியர் கபில பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

## வெளிநாடுகளில் இருந்து மேலும் 656 பயணிகள் நாடு திரும்பினர்

வெளிநாடுகளில்இருந்துஇன்று(ஞாயிற்றுக்கிழமை)காலை8.30மணியுடன்நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் 656 பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இக் காலக் கட்டத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கிய 06 விமானங்களின் மூலமாக இவர்கள் நாட்டை வந்தடைந்ததாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்களில் சவுதி அரேபியாவில் இருந்து 76 பேரும் மாலைதீவில் இருந்து 58 பேரும் ஜப்பானில் இருந்து 52 பேரும் கட்டாரில் இருந்து 38 பேரும் ஏனையவர்கள் வேறு நாடுகளில் இருந்தும் வருகைத் தந்துள்ளனர். இவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்காக இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதேவேளை, இக்காலக் கட்டத்தில் 10 விமானங்களின் மூலமாக கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து 652 பயணிகள் நாட்டைவிட்டு புறப்பட்டும் உள்ளனர்.

அவற்றில் கட்டாருக்கு 144 பேரும் ஓமானின் மஸ்கட்டிற்கு 112 பேரும் புறப்பட்டவர்களுள் அடங்குவர் என்றும் கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதன்படி, கடந்த 24 மணிநேரப் பகுதியில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் மொத்தம் 19 பயணிகள் விமான சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.




## விஷ்ணு விஷாலுக்கு ஜோடியாக நடிக்கும் ஐஸ்வர்யா ராஜேஷ்

நடிகர் விஷ்ணு விஷால் அடுத்ததாக நடிக்க உள்ள படத்தில் அவருக்கு ஜோடியாக ஐஸ்வர்யா ராஜேஷ் நடிக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழில் வெண்ணிலா கபடி குழு, பலே பாண்டியா, குள்ள நரி கூட்டம், நீர்ப்பறவை, முண்டாசுப்பட்டி, வேலைன்னு வந்துட்டா வெள்ளைக்காரன், ராட்சசன் உள்ளிட்ட படங்களில் நடித்தவர் விஷ்ணு விஷால். இவர் நடித்துள்ள காடன், ஜகஜால கில்லாடி ஆகிய படங்களின் ரிலீசுக்கு தயாராகி வருகின்றன. தற்போது எப்.ஐ.ஆர். எனும் படத்தை தயாரிப்பதோடு மட்டுமல்லாமல் அதில் ஹீரோவாகவும் நடித்துள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு முடிந்து இறுதிக்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதையடுத்து மோகன் தாஸ் படத்தில் நடிக்க உள்ளார் விஷ்ணு விஷால். களவு படத்தை இயக்கிய முரளி கார்த்திக் இப்படத்தை இயக்க உள்ளார். உண்மைக்கதையை மையமாக வைத்து உருவாக உள்ள இப்படத்தை விஷ்ணு விஷால் தனது சொந்த தயாரிப்பு நிறுவனம் மூலம் தயாரிக்கிறார்.

இந்நிலையில், நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ், இப்படத்தில் விஷ்ணு விஷாலுக்கு ஜோடியாக நடிக்க உள்ளதாக படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதர நடிகர், நடிகைகள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் தேர்வு மும்முரமாக நடைபெற்று வருகிறது.



## சிவகார்த்திகேயனுடன் இணையும் Cook with comali பிரபலம்!



சிவகார்த்திகேயன் நடிக்கும் புதிய படத்தில் குக் வித் கோமாளி நிகழ்ச்சியை சேர்ந்த சிவாங்கி ஒப்பந்தமாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சிவகார்த்திகேயன் நடிப்பில் சிபிசக்கரவர்த்தி இயக்கஇருக்கும் 'டான்' திரைப்படத்தில் அவர் நடிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக இந்த படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக பிரியங்கா மோகன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாகவும், எஸ் ஜே சூர்யா வில்லனாக நடிக்கவுள்ளதாகவும் கூறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சூரி மற்றும் சமுத்திரக்கனி ஆகிய இருவரும் இணைந்திருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 'தளபதி 66' இயக்கப்போவது யார்? – 4 இயக்குனர்களிடையே கடும் போட்டி

நடிகர் விஜய்யின் 66-வது படத்தை இயக்க நான்கு இயக்குனர்களிடையே கடும் போட்டி நிலவி வருவதாக கூறப்படுகிறது.

நடிகர் விஜய்யின் 65-வது படத்தை நெல்சன் இயக்க உள்ளார். இப்படத்திற்கான ஆரம்பக்கட்ட பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. விரைவில் இப்படத்தின் படப்பிடிப்பு தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனிடையே விஜய்யின் 66-வது படம் குறித்த தகவல்களும் தொடர்ந்து வெளிவந்த வண்ணம் உள்ளன.

அதன்படி, விஜய்யின் 66-வது படத்தை தேனாண்டாள் பிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்க உள்ளதாம். இந்நிறுவனம் ஏற்கனவே விஜய்யின் மெர்சல் படத்தை தயாரித்திருந்தது. அதேபோல் இப்படத்தை இயக்குவதற்காக லோகேஷ் கனகராஜ், எச்.வினோத், அட்லீ, அஜய் ஞானமுத்து ஆகிய நான்கு இயக்குனர்களிடையே கடும் போட்டி நிலவி வருவதாக கூறப்படுகிறது.



## என் வீட்டில் ஐடி ரெய்டு நடந்ததற்கு காரணம் அந்த ரூ.2 கோடி தான் – ராஷ்மிகா



வீட்டில் வருமான வரித்துறையினர் நடத்திய சோதனை குறித்து கருத்து சொல்லாமல் இருந்த ராஷ்மிகா, தற்போது விளக்கம் அளித்துள்ளார்.

விஜய் தேவரகொண்டா நடிப்பில் தமிழ், தெலுங்கில் வெளியான டியர் காம்ரேட் படத்தில் கதாநாயகியாக நடித்தவர் ராஷ்மிகா மந்தனா. கார்த்தி ஜோடியாக சுல்தான் படத்தில் நடித்துள்ளார். இந்த படம் விரைவில் திரைக்கு வர உள்ளது. ராஷ்மிகாவின் வீடு கர்நாடக மாநிலம் குடகு விராஜ் பேட்டையில் உள்ளது. இந்த வீட்டில் வருமான வரி அதிகாரிகள் ஏற்கனவே சோதனை நடத்தி ரொக்க பணம், நகைகள் மற்றும் சொத்து ஆவணங்களை கைப்பற்றினர்.

இந்த சோதனை குறித்துகருத்துசொல்லாமல் இருந்த ராஷ்மிகா தற்போது விளக்கம் அளித்துள்ளார். அவர் கூறும்போது, 'நான் ஒரு படத்துக்கு ரூ.2 கோடி சம்பளம் வாங்குவதாக அப்போது தகவல் பரவியது. அந்த செய்திகள் தான் வருமானவரி துறையினர் சோதனைக்கு காரணம். உண்மையில் நான் ரூ.2 கோடி சம்பளம் வாங்கவில்லை. நான் அவ்வளவு பெரிய தொகையை கேட்டாலும் தயாரிப்பாளர்கள் தர மாட்டார்கள்.

கதாநாயகனுக்கே அவ்வளவு சம்பளம் தருவது இல்லை. உங்களுக்கு எப்படி தர முடியும் என்பார்கள். நான் ஐதராபாத்தில் புது வீடு வாங்கி இருப்பது பற்றி பேசுகிறார்கள். ஓட்டலில் தங்குவது சிரமமாக இருந்ததால் வீடு வாங்கினேன். என்னை பற்றி வரும் கிசுகிசுக்கள் ஆரம்பத்தில் வருத்தம் ஏற்படுத்தின. இப்போது கண்டுகொள்வது இல்லை' என்றார்.

## 21 வருடங்களுக்கு பிறகு வெள்ளித்திரைக்கு வரும் ஷாலினி!

தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகிய நடிகை ஷாலினி அஜித்குமார் காதலுக்கு மரியாதை திரைப்படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமானார்.

இதனைத்தொடர்ந்து தற்போது ஷாலினி 21 ஆண்டுகளுக்குப் பிறகு இயக்குனர் மணிரத்னம் இயக்கி கொண்டிருக்கும் 'பொன்னியின் செல்வன்' திரைப்படத்தில் கேமியோ ரோலில் நடிக்கவுள்ளாராம்.

இந்தத் தகவல் தற்போது இணையத்தில் பரவி வருகிறது. இந்த செய்தியை தல ரசிகர்கள் கொண்டாடிவருகின்றனர். மணிரத்தினம் இயக்கம் என்பதால் மட்டுமே தல அஜித் இந்த படத்தில் நடிப்பதற்கு ஒப்புதல் கொடுத்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

தொகுப்பு :– ஹாசினி




# வெயிலால் முகத்தில் ஏற்பட்ட கருமையை நீக்க குறிப்புகள்

என்ன தான் மழைப் பெய்தாலும், சூரியக்கதிர்கள் சருமத்தை மிகவும் கடுமையாக பாதிக்கின்றன. சூரியக்கதிர்கள் அளவுக்கு அதிகமாக சருமத்தைத் தாக்கும் போது, அதனால் சருமத்தின் நிறம் கருமையாகிவிடுகிறது.

இப்படி கருமையான சருமத்தை வெள்ளையாக்க என்ன வழி உள்ளது என்று பலரும் தேடுவோம். அத்தகையவர்களுக்காக விடுமுறை நாட்களில் வீட்டில் இருக்கும் போது எப்படி வெயிலால் சருமத்தில் ஏற்பட்ட கருமையைப் போக்குவது என்று கொடுக்கப்பட்டுள்ளது.

கெமிக்கல் கலந்த பொருட்களை சருமத்தில் பயன்படுத்த வேண்டுமெனில் பலமுறை யோசிக்க வேண்டும். ஆனால் இயற்கைப் பொருட்களைக் கொண்டு முகத்தில் மாஸ்க் போட்டால், எந்த ஒரு பக்க விளைவும் இல்லாமல், சருமத்தில் உள்ள கருமை நீங்குவதோடு, சருமமும் ஆரோக்கியமாக இருக்கும்.



எலுமிச்சை சாறு மற்றும் தேன் 2 டீஸ்பூன் எலுமிச்சை சாற்றில் 2 டீஸ்பூன் தேன் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 30 நிமிடம் ஊற வைத்து, பின் முகத்தைக் கழுவ வேண்டும். இப்படி செய்து வந்தால், முகத்தில் வெயிலால் ஏற்பட்ட கருமை மறையும்.

கடலை மாவு மற்றும் மஞ்சள் தூள் இந்த ஃபேஸ் பேக், வெயிலால் ஏற்பட்ட கருமையை குறைப்பதோடு, பொலிவை அதிகரிக்கும். அதற்கு 4 டீஸ்பூன் கடலை மாவுடன், 1 டீஸ்பூன் மஞ்சள் தூள் மற்றும் சிறிது பால் சேர்த்து கலந்து பேஸ்ட் செய்து, முகம் மற்றும் கழுத்தில் தடவி 30 நிமிடம் ஊற வைத்து, பின் வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும்.

பேக்கிங் சோடா இந்த முறை கூட முகத்தில் உள்ள கருமையைப் போக்கும். அதற்கு பேக்கிங் சோடாவை ரோஸ் வாட்டரில் கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, பின் கழுவ வேண்டும்.

ஓட்ஸ் இது ஒரு நேச்சுரல் ஸ்கரப்பர். இந்த ஸ்கரப் செய்வதற்கு சிறிது ஓட்ஸ் உடன், பால் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி மென்மையாக ஸ்கரப் செய்ய வேண்டும். பின் முகத்தைக் கழுவிய பிறகு, வைட்டமின் ஈ ஆயிலை முகத்தில் தடவி மசாஜ் செய்து விட வேண்டும்.

எலுமிச்சை சாறு மற்றும் உப்பு எலுமிச்சை ஒரு சிறப்பான ப்ளீச்சிங் தன்மை வாய்ந்த பொருள். அந்த எலுமிச்சையின் சாற்றில் சிறிது உப்பு சேர்த்து கலந்து, குளிக்கும் போது இந்த கலவையைக் கொண்டு சருமத்தை மென்மையாக ஸ்கரப் செய்து, குளிர்ந்த நீரில் கழுவினால், சருமத்தில் உள்ள கருமைகள் அகலும்.

வெள்ளரிக்காய் வெள்ளரிக்காய் கூட சரும கருமையை நீக்க உதவும். அதற்கு வெள்ளரிக்காயை பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி 30 நிமிடம் ஊற வைத்து, பின் அலச வேண்டும். இதனால் சருமத்தில் இருக்கும் கருமை மட்டுமின்றி, கரும்புள்ளிகள், பருக்கள் போன்றவையும் நீங்கும்.

கற்றாழை ஜெல் கற்றாழை ஜெல்லை சருமத்தில் பயன்படுத்தினால், சருமத்தில் ஏதேனும் தொற்றுகள் இருந்தால் நீங்குவதோடு, சருமமும் ஈரப்பசையுடன் இருக்கும். அதற்கு கற்றாழை ஜெல்லை முகத்தில் தடவி மென்மையாக சிறிது நேரம் மசாஜ் செய்து, பின் குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவ வேண்டும்.

நான் இன்றும்
வியக்கிறேன் யாருக்கும்
பிடிகொடுக்காத என்
இதயம் உன்னை பார்த்த
அந்த நொடி எப்படி
தொலைந்தது என்று
ஆனால்
தேட விருப்பம் இல்லை
நீயே என் இதயமாக
வந்துவிடு!!!





கண்களாக
நீ...
அதில் கண்ணீராக
நான் ...
அழுது விடாதே
பிரிந்து ..
விடுவேன்

# இளமைத் தோற்றத்தைத் தக்க வைக்க சில வழிகள்

**இளமை**

இன்றைய காலத்தில் இளம் வயதினர் விரைவில் முதுமையானவர்கள் போன்று காட்சியளிக்கின்றனர். இப்படி காட்சியளிப்பதற்கு சரும பராமரிப்புகளும், உண்ணும் உணவுகளும், பழக்கவழக்கங்களும் தான் முக்கிய காரணமாக விளங்குகின்றன.

அதிலும் தற்போது பெரும்பாலானோர் ஜங்க் உணவுகளை அதிகம் எடுத்து வருவதால், உடலில் பல பிரச்சனைகளை கொண்டு வருவதுடன், சருமத்தின் அழகையும் பாதிக்கிறது.

இதில் முக்கியமாக ஆண்கள் தான் விரைவில் முதுமையானவர்கள் போன்று காணப்படுகின்றனர். இதற்கு அவர்கள் தங்களின் சருமத்திற்கு போதிய பராமரிப்புக்களை கொடுக்காதது தான் காரணம்.

அக்காலத்தில் எல்லாம் ஆண்கள் தங்கள் சருமத்திற்கு எவ்வித பராமரிப்புக்களும் கொடுக்காமலேயே அழகாகவும் இளமையுடனும் காட்சியளித்தனர். ஆனால் இன்றைய மாசு நிறைந்த சுற்றுச்சூழலால் ஆண்கள் தவறாமல் தங்களின் சருமத்தைப் பராமரித்தால் தான் இளமைத் தோற்றத்தைப் பாதுகாக்க முடியும்.

**ஒரஞ்சு ஸ்கரப்**

ஒரஞ்சு ஜூஸில் சிறிது தேன் மற்றும் சர்க்கரை சேர்த்து நன்கு மென்மையாகும் வரை கலந்து, பின் அதனை முகத்தில் தடவி 2-3 நிமிடம் ஸ்கரப் செய்து, குளிர்ந்த அல்லது வெதுவெதுப்பான நீரில் முகத்தை கழுவ வேண்டும். இதனால் ஆரஞ்சு ஜூஸில் உள்ள வைட்டமின் சி சத்தானது பாதிப்படைந்த செல்களை புதுப்பித்து, இளமையான தோற்றத்தை தக்க வைக்கும். அதிலும் இந்த முறையை இரண்டு நாட்களுக்கு ஒருமுறை செய்து வர வேண்டும்.

**தக்காளி**

உணவில் தக்காளியை அதிகம் சேர்த்து வருவதுடன், அதன் சாற்றினை தினமும் முகத்தில் தடவி மசாஜ் செய்து உலர வைத்து கழுவி வந்தால், அது சருமத்திற்கு தேவையான வைட்டமின் சி, ஏ மற்றும் கே சத்துக்களை வழங்கி, சருமத்தை பொலிவோடும் அழகாகவும் வைத்துக் கொள்ளும்.

**கற்றாழை**

கற்றாழை ஜெல்லை தினமும் முகத்திற்கு தடவி மசாஜ் செய்து, 20 நிமிடம் ஊற வைத்து, பின் கழுவினால், சருமத்தில் தங்கியுள்ள நச்சுக்கள் அனைத்தும் வெளியேறி, சருமமானது இளமையுடன் காட்சியளிக்கும்.

**தேன் ஃபேஷியல்**

வறட்சியுடனும், மென்மையிழந்து இருந்து சருமத்திற்கு தேன் ஃபேஷியல் செய்வது நல்ல பலனைத் தரும். அதற்கு தேனை சருமத்திற்கு தடவி 30 நிமிடம் ஊற வைத்து, பின் வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும்.

**தொகுப்பு :- ஹாசினி**

02ஆம் பக்க தொடர்ச்சி...

தனது மகள் உயிருடன் இருப்பதாக நம்பிக்கை வெளியிட்ட காசிப்பிள்ளை ஜெயவனிதா ஒருமுறையாவது தமது மகளை காட்டுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தின் போது 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4 ஆம் திகதி இரட்டை வாய்க்கால்பகுதியில் வைத்து தனது மகள் காசிப்பிள்ளை ஜெரோமிகாணாமல் போனதாக அவரது தாய்காசிப்பிள்ளை ஜெயவனிதா காணாமல் போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதிஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

எனினும் கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஜனாதிபதி தேர்தலுக்காக வெளியிடப்பட்ட நூறுநாட்களில் புதிய நாடு என்ற துண்டுப்பிரசுரத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் தனது மகள்காசிப்பிள்ளை ஜெரோமி நிற்பதை தாம் கண்டு கொண்டதாக அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடிய போதிலும் தனது மகள்தொடர்பில் எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லையென அவர் குறிப்பிட்டார்.

காணாமல் போன தனது மகள் தொடர்பில் பல ஆணைக்குழுக்களும், புலனாய்வு பிரிவினரும்விசாரணைகளை மேற்கொள்கின்ற போதிலும் உரிய தீர்வு கிடைக்கவில்லையென கவலைவெளியிடும் வனிதா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே தனது மகள் தொடர்பில் உரிய தீர்வைவழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

அதேவேளை, காணாமல் போயுள்ள தனது மகள் காசிப்பிள்ளை ஜெரோமிக்கான அவரது தாய் காசிப்பிள்ளை ஜெயவனிதா கவிதை ஒன்றையும் எழுதி பாடியுள்ளார்.

இதேவேளை, மன்னார் மடு பகுதியில் வைத்து காணாமல் போன தனது மகள் நாகஜோதி நாகராசா ஜனாதிபதியுடன் புகைப்படத்தில் காணப்பட்ட போதும் ஜனாதிபதி விடுதலை செய்யாமைக்கான காரணம் என்னவென்று அவரது தாயார் திருமதி நாகராசா கேள்வியெழுப்பியுள்ளார்.

# விவேகானந்தரின் பொன்மொழிகள்

இருதயம் விரிவடைந்துள்ள இடத்தில்தான் உண்மை ஞானம் உதிக்கும். அந்த உண்மை ஞானம்தான் நம்பிக்கை.

அடக்கப்படாமல் உள்ள மனமும், அறவழியில் செலுத்தப்படாத மனமும் நம்மை எப்போதும் கீழ் நோக்கியே இழுத்துச் சென்று அழித்துவிடும். அடக்கப்பட்ட மனமும், அறவழியில் செல்லும் மனமும் நமக்குப் பாதுகாப்பை அளித்திடும். உலகபந்தங்களில் இருந்து விடுதலையளிக்கும்.

கபடம் இல்லாத நாத்திகன் வஞ்சகனை விடச் சிறந்தவன் ஆவான்.

காமம், பொன்னாசை இவைகளால் ஆளப்படும் அற்பர்கள் பொருட்படுத்தப்படக்கூடியவர்கள் அல்லர்.

எவர் ஒருவருடைய நெஞ்சு ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுமோ, அவரையே நான் மகாத்மா என்பேன்.

அன்பு நெறியிற் சென்று உலகம் உய்வடைந்திட வழிகளைக் கூறும் முறை மதம் எனப்படும்.

கோழைகளே பாவ காரியங்களைப் புரிந்திடுவர். தைரியமுடையோர் ஒருக்காலும் பாவம் செய்யார்.

பலமற்ற மூளையில் நாம் எதையுமே செய்ய இயலாது. அதனால் நாம் அதைப் பலப்படுத்த வேண்டும்.

அச்சமே நமக்குத் துயரத்தைத் தருவது. அச்சமே கேட்டை விளைவிப்பது. அச்சமே மரணத்தைத் தருவது. நமது உண்மை இயல்பை நாம் அறிந்து கொள்ளாமல் இருப்பதனால்தான் நமக்கு அச்சம் ஏற்படுகின்றது.

இவ்வுலகில் பிறந்த நீங்கள் அதற்கு அடையாளமாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். இல்லையேல் உங்களுக்கும் மரங்கள் கற்களுக்கும் வேறுபாடு இல்லாமற் போய்விடும்.

முதலில் வேலைக்காரனாயிருக்கக் கற்றுக் கொண்டால், எஜமானாகும் தகுதி பின்னர் தானாகவே வரும்.

அன்புடையவனே வாழ்பவன். சுயநலமுடையவனோ செத்துக் கொண்டிருக்கின்றான் என்றே பொருள்.

சேர்ந்து வாழ்தலே சிறந்த வலிமையாகும்.

எந்த வேலையாக இருந்தாலும் அதைத் தன் விருப்பத்திற்கு ஏற்றதாக மாற்றுபவனே அறிவாளியாவான்.

தன்னை அடக்கப் பழகிக்கொண்டவன் வேறு எதற்கும் சிக்கமாட்டான். அத்தகைய தகுதி உள்ளவனே உலகில் நன்றாக வாழத் தகுதியுள்ளவன்.

பலமே வாழ்வு, பலவீனமே மரணம்.

தூய்மை, பொறுமை, விடாமுயற்சி இவை மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். அத்துடன் இவை அனைத்துக்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

உறுதியுடன் இரு. அதற்கு மேலாகத் தூய்மையானவனாகவும், முழு அளவில் சிரத்தை உள்ளவனாகவும் இரு.

# தமிழ் தத்துவம்

அரிசி என்றாலும்
அரசியல் என்றாலும் களையெடுப்பது
அவசியம்

அதிக சந்தோஷத்தை கொடுத்ததும் முகநூல்
பல வலிகளை கொடுத்ததும் முகநூல்...

வானிலையைவிட அதி
வேகமாய் மாறுகிறது
மனிதனின் மனநிலை...

காப்பாற்ற வேண்டிய
நேரங்களில் ஓய்வெடுக்க
போய்விடுகிறார் கடவுள்...

புன்னகை அவ்வப்போது பொய் பூசிக்கொள்கிறது...
பொய்யும் அவ்வப்போது புன்னகை பூசிக்கொள்கிறது...

மனித மனங்களிலிருந்து மனிதநேயம்
மட்டும் தான் இன்னும் எட்டாத தொலைவில் இருக்கின்றது...

மனதை சுத்தப்படுத்த ஒருநொடி
போதும் அந்த ஒருநொடியை
செலவு செய்யத்தான் நமக்கு
மனமில்லை...

கஸ்டங்கள் கவலைகள் உனக்கு
மட்டும் தான் என்று புலம்பாதே
இங்கு சந்தோஷத்தை மட்டும்
அனுபவிக்கும் மனிதர் எவருமில்லை...

எங்கு உனக்கு
கேள்வி கேட்க
உரிமையில்லையோ
அங்கு நீ
அடிமைபடுத்தப்படுகிறாய்...

இதயத்தின் காயங்கள் எல்லாம்
இணையத்தில் கிறுக்கல்களாக...

அடுத்த நொடி
நமக்கு சொந்தமில்லாத போது
நீயா நானா என்ற
போட்டி பொறாமைகள் எதற்கு...

விதியை மதியால் வெல்லலாம்
என்று எவ்வளவு முயற்சி செய்தாலும்
பல நேரங்களில் விதிதான் வெல்லுது...

நம் பிரச்சனைக்கு
மற்றவர்களால் ஆறுதல் மட்டுமே தரமுடியும்.....
அதற்கான தீர்வு நம்மிடமே உள்ளது

பூவோடு இருப்பதால் முள்ளை
யாரும் விரும்புவதுமில்லை.....
முள்ளோடு உள்ளதென்று பூவை
வெறுப்பதுமில்லை.....

உழைப்பவர்களின்
ஊதியமெல்லாம்

வியர்வையோடு கரைய
ஊழல் செய்கின்றவன்
வாழ்க்கை எல்லாம் மாடி வீடுகளாக
வளர்ந்துக்கொண்டிருக்கு

ஊமையாகவே
இருந்து விடாதே
வாழ்க்கை உன்னை
ஊனமாக்கிவிடும்...

ஆசை படுவதெல்லாம்
நிறைவேறுவதில்லை
நிறைவேறாதவை எல்லாம்
நன்மைக்கே என்று....
மனதை தேற்றிக்கொள்வோம்

நாளை....
கனவைபோன்றது
இன்றைய
நிஜத்தை ரசித்திடு

எதிர்ப்பவரிடம்....
துணிந்து நில்
மதிப்பவரிடம்....
பணிந்துச்செல்

புகழ்ந்தால் மயங்காதே....
இகழ்ந்தால்
தளராதே....

**கடந்தவாரத்தில்(2021.02.07) இடம்பெற்ற கட்டுரைகளின் தொடர்கள்**
**வருகின்ற வார(2021.02.28) இணைய பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்**

# இரு பாதை ஓர் யுத்தம்
# ஒரு காதலனின் போர்ப் பயணம்

**பு.தர்சிகன்**

ஈழத்தின் ஓர் அடர்ந்த காட்டில் நிலவும் ஒளி தர விரும்பா இருளில் இரு விழிகள் அங்குமிங்குமாய் தூரத்தில் எதையோ நோட்டமிட்ட வண்ணம் பெரும் சாதனை ஒன்றை படைக்கப்போகும் மகிழ்வோடு...

யாரையோ.... அல்லது எதையோ எதிர்பார்த்து காத்து நின்றன ....

நிமிடங்கள் சில இருளில் கரைந்தோட அவ் விழிகளின் தாகத்திற்கான பதிலாய் அக் கார் இருள் கிழித்து ஊடுருவிய ஒளிப்பெருக்கில் அந்த கானகம் மட்டுமல்லா அந்த மறவனின் முகமும் சற்றே ஒளி படர்ந்தே போனது காண்பதற்கு அரிய காட்சிகளாய் ...

நெஞ்சில் நிலைக்க அவன் நெஞ்சமும் சற்றே காலம் விட்டோடி எமக்காய் அவன் நினைவுகளை அந்த பள்ளி நாட்களுக்குள்ளாய் அழைத்துச்சென்றது...

ஆம் அது 90'களின் ஆரம்பகாலம்...

இடம்பெயர்வு அவனையும் அவன் குடும்பத்தையும் வன்னியின் பெரும் நிலப்பரப்பைநோக்கிநகர்த்தியிருந்தது ...

புதிய முகங்கள் புதிதான இடம் நண்பர்களின் பிரிவு என அத்தனையும் ஒன்றாய் வாட்ட விதியை நொந்தவனாய் வன்னியை குடிநிலமாக்கி நாட்களை கடத்தினான்....

அதுவும் வழமை போன்றதொரு ஈழவிடியலாய் விடியவே அன்றைய நாளின் விடியல் அவன் வாழ்வின் கால ஓட்டத்தை மாற்றக்காத்திருப்பதை அறியாமலே பள்ளி சென்றவன் புதிதாய் ஓர் முகம் பள்ளியில் அறிமுகமாகவே தன் வாழ்வியலை மாற்றப்போகும் அவ் முகத்தையும் இடப் பெயர்வின் அங்கமாய் எண்ணி நட்பாக்கி நகர்ந்தான் ...

சில நாட்களிலேயே அவள் அவனுக்கு அனைவரிலும் பார்க்க தனித்து தெரிய ஆரம்பித்திருந்தாள் அந்த உணர்வு அவனுக்குள்ளாய் மட்டுமல்ல அனைவருக்குள்ளாயுமே இருந்தது அது தான் நிதர்சனம்...

ஏன் எதற்கு அப்படி அவள் மட்டும் !!!



ஆம் அத்தனை காலமும் தங்கள் வாழ்வியலை பள்ளி படிப்பு நண்பர்கள் என்றே கழித்திருந்த அவர்களுக்கு அவளின் விடுதலை உணர்வும் வாழ்வியல் சிந்தனைகளும் சற்றே விந்தையாகவே அமைந்திருக்க சிலர் அவளை வியப்பாகவும் இன்னும் சிலர் பயத்துடனுமே பார்த்திருக்க. இவன் அவளோடு தோழனாய் பழக ஆரம்பித்திருந்த காலங்கள் அவை.

காலங்கள் சில கடந்தோட....

அவள் மீதான ஈர்ப்பு பதின்ம வயதின் காலங்கள் என அவை அவள் மீது காதலை தோற்றுவித்திருக்க பலமுறை அவன் மறைமுகமாக தன் காதலை வெளிப்படுத்தியிருந்தும் ...

அவற்றை புரிந்து கொண்ட அவளோ பெரிதாய் எதையும் எடுக்காமல் நட்பாய் தொடரவே அவர்கள் பள்ளிப்பருவத்தின் இறுதி நாளும் அன்று வந்தது...



இன்று முடிவாய் தன் காதலை அவளிடம்வெளிப்படுத்திவிடுவதென்று பள்ளி வந்தவனுக்கு அவளை எங்கு தேடியும் காணவில்லை என்பது ஏற்க முடியாமல் இருந்தாலும் ... அவள் முன்பொரு நாள் சொன்ன ஒரு வார்த்தை மட்டும் நெஞ்சை போட்டு குடைய்வதாய் அமைந்திருந்தது..

(எழில் என்டைக்காவது ஒருநாள் நாட்டுக்காக நான் உங்கள் எல்லாரையும் விட்டுட்டு போவன்டா நான் மட்டுமல்ல ஒவ்வொரு குடிமகனுக்கும் இது கடமையடா நீயும்தான்...)

என்ற அவள் வார்த்தைகளின் நிதர்சனமான வலிமையை அன்று தான் அவன் உணர்ந்து கொண்டான்.

அவன் சிந்தை அவள் எங்கோ ஓர் மூலையில் நம் தேசத்திற்கான பணியில் தன் உடல் உயிர் ஆசா பாசம் அத்தனையும் துறந்து தேசத்தின் மீதான காதலிற்காய் போராடிக்கொண்டிருப்பாள் என எண்ணிக்கொண்டவனுக்கு அவள் பிரிவின் சோகம் ஒரு புறமும் தன் காதலை ஒரு முறையேனும் அவளிடம் வெளிப்படுத்திவிடவேண்டும் என்னும் ஏக்கம் மறுபுறமுமாய் அவனை உயிரற்றஉடலைப்போலனவாழ்க்கை ஒன்றிற்குள்ளாய் தள்ளிவிடவே ...

தன் காதல் தான் கைகூடவில்லை என்றாலும் தான் காதல் கொண்ட மங்கை அவள் சிந்தையில் நித்தம் நேசிக்கும் அவள் தேசக்காதலுக்காய் தானும் பாடுபட எண்ணியே தன்னையும் விடுதலைப்போர் தன்னில் இணைத்துக்கொண்டான்.

அவன் மனம் எண்ணிக்கொண்டது மணபந்தத்தில்இணையாதஎம்காதல் ஒன்றாகி மானப்போரிலெனினும் தாய்தேசம் என்னும் குழந்தைய பிரசவிப்போம் என்று .

(டேய் எழில் வேகமா வாகனத்துல ஏறுடா நாம முன்னேறிப்போகனும் நேரம் ஆகுது )

என்ற அவன் தோழர் குரல் கேட்டு காலம் கடந்த அவன் நினைவுகள் களம் நோக்கி மீளவே தோழர்களோட இவனும் இணைந்து கொள்ள அவர்கள் வாகனம் முன்னரங்கம் நோக்கி வேகமெடுத்தது ...

ஆனாலும் அவன் மனதில் அடிக்கடி உருப்பெறும் கேள்வி இது வருடங்கள் பல கடந்தும் களங்கள் பல கண்டும் எங்குமே அவன் வாழ்வியலை மாற்றிப்போட்ட அவளையோ அவள் பெயரையோ அவன் கண்டோ கேள்விப்பட்டோ இருந்திருக்கவில்லை ....

ஏன் அவளை அவனால் காண முடியாமல் போனது அவள் அப்படி எங்கு என்ன செய்து கொண்டு இருக்கிறாள் !

இக் கதைக்களம் விலகி அவளிடம் சென்று எழில் மனக்கேள்விக்கான பதில் பெற்று வருவோம்...

எழில் மனம் வென்ற மங்கை அவளும் காத்துத்தான் நிற்கிறாள் தாய் நாட்டை அல்ல வீதியின் ஓரமாய் தன் தாய்மையின் காவலன் அவள் கணவன் வருகைக்காய் ...

அந்த பனி படர்ந்த தரை விலத்தி வேகமெடுத்து அவள் முன் நின்ற காரிற்குள்ளிருந்து அவள் கணவன் ...

Hi babe lets go.. என்றவாரே அழைக்க கடல் கடந்த தேசமதில் அவர்களின் வாகனமும் வேகமெடுத்து வீடு நோக்கி விரைந்தது ....

இங்கோ அவன் களம் நோக்கி விரையக் காரணமானவள் விலையுர் வாகனத்தில் ஆடம்பரங்களின் அரசியாய் தன் இல்லம் நோக்கி அவள்...

எழில் நெஞ்சமதில் விடுதலைத்தீ இட்ட வீரமங்கை எங்கோ ஓர் களத்தில் தேசப்பணியில் இருப்பாள் என எண்ணியே தொடர்கிறது எழில் பயணம் களம் நோக்கி.....




## புதிய அம்சங்களை அறிமுகப்படுத்தும் அப்பிளின் iMessage செயலி!

மால்வேர் தாக்குதல்கள் மற்றும் தீங்கிழைக்கும் குறியீடுகளுக்கு எதிராக சேவையைப் பாதுகாக்கும் புதிய தொழில்நுட்பத்தை அப்பிள் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

அந்தவகையில் Dubbed BlastDoor என்று அழைக்கப்படும் இடத்திலுள்ள பாதுகாப்பு அமைப்பு, iMessage-க்கு மற்றொரு அடுக்கு பாதுகாப்பைச் சேர்த்துள்ளது.

iMessage பாதுகாப்பு அடுக்கு செயற்படும் விதம் என்னவென்றால், ஒரு செய்தியில் உள்வரும் இணைப்பு சேவையை ஆய்வு செய்யக் கூடிய ஒரு தனிமைப்படுத்தப்பட்ட மண்டலம் எது என்பதை ப்ளாஸ்ட்டூர் சாண்ட்பாக்ஸிங் அடிப்படையில் வழங்குகிறது.

எனவே, எந்தவொரு தீங்கிழைக்கும் குறியீடு அல்லது add-ons -களும் வெளியிடப்படுவதற்கு முன்பு, அதை உங்கள் ஐபோன் அல்லது ஐபாடில் புதிய iMessage ஆகப் பெறுவீர்கள்.

இது மிகவும் முக்கியமானது. ஏனெனில் எளிமை மற்றும் வசதிக்காக iMessage கட்டமைக்கப்பட்டுள்ளது. இது மிகவும் குறைந்த யூசர் உள்ளீட்டு சூழலாகும். உதாரணமாக, ஒரு படம் அல்லது வீடியோ அல்லது ஆவண இணைப்பைப் பதிவிறக்க அதை நீங்கள் கிளிக் செய்ய வேண்டிய அவசியமில்லை.

இரண்டாவதாக, டிஜிட்டல் கட்டணம் செலுத்துதல் உட்பட, உங்கள் ஐபோனில் உள்ள பிற பயன்பாடுகளுடன் iMessage இணைகிறது.

அனைத்திலும் கூடுதல் பாதுகாப்பு அடுக்கை இவை மிகவும் அவசியமாக்குகின்றன. உங்கள் ஐபோன் அல்லது ஐபாடில் iOS 14 இன் எந்தவொரு வெர்சனையும் நீங்கள் இயக்கும் வரை, புதிய பாதுகாப்பு அடுக்கு இயல்பாகவே உங்கள் iMessage பைப்லைனுக்காக இயக்கப்படும். உங்கள் ஐபோன் அல்லது ஐபாட் சமீபத்திய iOS 14 பதிப்பிற்கு புதுப்பிக்க, செட்டிங்ஸ் -, சாப்ட்வேர் அப்டேட்-க்கு சென்று புதிய புதுப்பிப்பைச் சரிபார்த்து பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.



## அசத்தல் வசதியுடன் உருவாக்கி வரும் புதிய ரியல்மி வயர்லெஸ் இயர்பட்ஸ்!

புதிய வயர்லெஸ் இயர்பட்ஸை ரியல்மி நிறுவனத்தின் விரைவில் அறிமுகம் செய்யப்பட இருப்பதாக இணையத்தில் தகவல் வெளியாகி உள்ளது. இதனை ரியல்மி நிறுவனம் பாப் இசை கலைஞர்களான தி செயின்ஸ்மோக்கர்ஸ் உடன் இணைந்து வெளியிட இருப்பதாக கூறப்படுகிறது.



இந்நிலையில் இதனை உறுதிப்படுத்தும் வகையில் இசை கலைஞர்கள் இடம்பெற்று இருக்கும் விளம்பர படம் வெளியாகி உள்ளது.

மேலும் இதில் உள்ள வாசகம்-“Noise off, Realme on” இது ஆக்டிவ் நாய்ஸ் கேன்சலேஷன் வசதியை கொண்டிருக்கும் என்பதை தெரியப்படுத்துகிறது. மேலும் இந்த புதிய இயர்பட்ஸ் ரியல்மி கடந்த ஆண்டு அறிமுகம் செய்த ரியல்மி பட்ஸ் ஏர் ப்ரோ மாடலின் மேம்பட்ட வெர்ஷனாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஐந்து ஸ்மார்ட் தொலைபேசிகளை அறிமுகம் செய்யும் சம்சுங் நிறுவனம்!

சம்சுங் நிறுவனம் விரைவில் ஐந்து புதிய ஸ்மார்ட் தொலைபேசிகளை சந்தையில் அறிமுகம் செய்யவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அந்தவகையில் கலக்சி F12, கலக்சி F62, கலக்சி M02, கலக்சி A52, கலக்சி A72 என ஐந்து மொடல்களை சம்சுங் அறிமுகம் செய்யவுள்ளது.

குறிப்பாக கலக்சி F12 மற்றும் கலக்சி F62 தொலைபேசிகளை இந்தியாவில் பிளிப்கார்டுடன் சேர்ந்து சம்சங் அறிமுகம் செய்யவுள்ளதாகவும் அதேபோல வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி முதல் M02 ஸ்மார்ட் தொரைபேசியையும் இந்தியாவில் அறிமுகமாகவுள்ளது.

மேலும் அவுஸ்திரியாவில் A52 5ஜி மொடலும், தாய்லாந்து மற்றும் கரீபியன் தீவில் A72 மாடலும் அறிமுகமாகவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன் இதில் கலக்சி F12 மற்றும் கலக்சி F62 ஸ்மார்ட் தொலைபேசிகள் இந்தியாவில் மாத்திரம் பிரத்யேகமாக அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.





## வட்ஸ் அப்பினை பயன்படுத்துவதற்கு இனி இவை அவசியம்

கடந்த காலங்களில் மிகவும் பிரபல்யமாக காணப்பட்ட குறுஞ்செய்தி செயலியான வட்ஸ் அப் ஆனது தற்போது பயனர்கள் மத்தியில் தனது பிரபல்யத்தை இழந்து வருகின்றது.

இதற்கு காரணம் அண்மையில் வெளியிடப்பட்ட நிபந்தனைகள் ஆகும்.




இப்படியிருக்கையில் மொபைல் சாதனங்கள் தவிர டெக்ஸ் டாப் கணினிகள் மற்றும் இணைய உலாவிகளில் பயன்படுத்தப்படும் வட்ஸ் அப்பிலும் மாற்றம் கொண்டுவரப்படவுள்ளது.

அதாவது முன்னர் QR குறியீட்டினை ஸ்கான் செய்வதன் ஊடாக இணையம் மற்றும் டெக்ஸ்டாப் கணினிகளில் பயன்படுத்தக்கூடியதாக இருந்தது.

ஆனால் தற்போது பயோமெட்ரிக் அனுமதி வழங்கும் முறை நடைமுறைக்கு கொண்டுவரப்படவுள்ளது.

இதன்படி கைவிரல் அடையாளம் அல்லது பேஸ்ஸ் ஐடியை பயன்படுத்த வேண்டும்.

**ஆச்சரியப்படுவது மனிதர்களின் அடிப்படை இயல்பு. அந்த இயல்புதான், அறிவியலுக்கு வித்தாக அமைகிறது.**

**ரால்ப் வால்டோ எமர்சன்**
**அமெரிக்க கவிஞர்**



# விளையாட்டு செய்திகள்

## கிரிக்கெட் வர்ணனையாளர் பிரையன் தோமஸீக்கு விளக்கமறியல் உத்தரவு

கிரிக்கெட் வர்ணனையாளரும் பத்திரிகையாளருமான பிரையன் தோமஸ் 1.43 மில்லியன் ரூபா மோசடி செய்த குற்றத்துக்காக அவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் பண்டார நும்தெனிய உத்தரவிட்டார். தொழிலதிபர் சந்திரா சாப்டர் கடந்த 2019 மார்ச்சில் வழங்கிய முறைப்பாட்டை அடுத்து அவரை குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் காவலில் வைத்தனர். தோமஸ்,ஆடை நிறுவனமொன்றின் தரகராக 1.43 மில்லியன் ரூபா மோசடியில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டினார்.

சந்தேகநபர் 1996ஆம்ஆண்டில் பல்வேறுகாரணங்களுக்காக ஒரு விளையாட்டுக்குழுவினரிடம் பணம் பறித்ததாகவும் கூறப்படுகிறது. பிணைச்சட்டத்தின் 14ஆவது பிரிவின் கீழ் சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்கப்பட வேண்டுமென குற்றப்புலனாய்வு திணைக்களம் கோரியது.

இதேவேளை பிரதிவாதியின் சட்டத்தரணி நீதிமன்றில், சந்தேக நபரின் வயது மற்றும் சமூகத்தில் கொவிட்-19 அபாயம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு பொருத்தமான பிணை வழங்கக் கோரினார். அனைத்துக் காரணங்களையும் பரிசீலித்த பின் சந்தேக நபரை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.




## ஐ.பி.எல் தொடருக்கான வீரர்களின் ஏலப் பட்டியலில் யாழ்.இளைஞன்!

நடப்பாண்டுக்கான ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் வீரர்களுக்கான ஏலம் எதிர்வரும் 18ஆம் திகதி சென்னையில் இடம்பெறவுள்ளது.

இந்த ஏல பட்டியலில் 292 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். ஆரம்பத்தில் 1114 வீரர்கள் பதிவு செய்திருந்த நிலையில் தற்போது இறுதி பட்டியல் வெளியாகியுள்ளது.

இதில் 31 இலங்கை வீரர்களில் ஒன்பது பேரின் பெயர் ஏலபட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர் விஜயகாந்த் வியஸ்காந்த் பெயரும் இடம்பெற்றுள்ளது.

19 வயதான விஜயகாந்த் வியஸ்காந்த் கடந்த ஆண்டு இடம்பெற்ற லங்கா பிரீமியர் லீக் தொடரில் யாழ்ப்பாணம் ஸ்டாலியன்ஸ் அணிக்காக விளையாடியிருந்தார்.

ஏல பட்டியலில் இடம்பெற்றுள்ள இலங்கை வீரர்களின் விபரங்கள்..

குசல் பெரேரா
திஸர பெரேரா
கெவின் கொத்திகொட
மஹேஷ் தீக்சன
விஜயகாந்த் வியஸ்காந்த்
துஷ்மந்த சமீர
வனிந்து ஹசரங்க
தசுன் ஷானக
இசுறு உதான



## போல் கொவ்ரி தனது பதவியை இராஜினாமா செய்தார்– ஸ்ரீலங்கா கிரிக்கெட்

ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் விளையாட்டுத்துறை அறிவியல் மற்றும் மருத்துவ முகாமையாளர் போல் கொவ்ரி தனது பதவியிலிருந்து விலகியுள்ளார் என ஸ்ரீலங்கா கிரிக்கெட் அறிவித்துள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி 15 ஆம் திகதி முதல் அவர் குறித்த பதவியில் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அவுஸ்ரேலிய பகிரங்க டென்னிஸ்: ஸ்வெரவ்-டிமிட்ரோவ், செரீனா- ஒசாகா மூன்றாவது சுற்றில் வெற்றி!

ஆண்டின் முதலாவது கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அவுஸ்ரேலிய பகிரங்க டென்னிஸ் தொடர். விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாமல் நடைபெற்று வருகின்றது.

கடினத்தரையில் நடைபெறும் இத்தொடரில் தற்போது மூன்றாவது சுற்றுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் ஆண்களுக்கான மூன்றாவது சுற்றுப் போட்டியில், பல்கேரியாவின் கிரிகோர் டிமிட்ரோவ், ஸ்பெயினின் பப்லோ கரேனோ புஸ்டாவை எதிர்கொண்டார்.

பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், முதல் செட்டை டிமிட்ரோவ், 6-0 என எளிதாக கைப்பற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில், டிமிட்ரோவ் 1-0 என்ற கணக்கில் முன்னிலைப் பெற்றிருந்த போது பப்லோ கரேனோ புஸ்டா, உபாதைக் காரணமாக போட்டியிலிருந்து வெளியேறினார். இதனால் டிமிட்ரோவ் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார்.

இன்னொரு ஆண்களுக்கான மூன்றாவது சுற்றுப் போட்டியொன்றில், ஜேர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரவ், பிரான்ஸின் அட்ரியன் மன்னாரினோவுடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், அலெக்ஸாண்டர் ஸ்வெரவ், 6-3, 6-3, 6-1 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தார்.

இதேபோல பெண்களுக்கான மூன்றாவது சுற்றுப்போட்டியொன்றில்,அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், ரஷ்யாவின் அனஸ்தேசியா பொட்டபோவாவை எதிர்த்து விளையாடினார்.

எதிர்பார்ப்பு மிக்க இப்போட்டியில், செரீனா வில்லியம்ஸ், 7-6, 62 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குள் அடியெடுத்து வைத்தார்.

மற்றொரு பெண்களுக்கான மூன்றாவது சுற்றுப் போட்டியொன்றில், ஜப்பானின் நவோமி ஒசாகா, துனிசியாவின் ஒன்ஸ் ஜாபூரை எதிர்கொண்டார்.

இப்போட்டியில், நவோமி ஒசாகா, 6-3, 6-2 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றார்.



# உலக செய்திகள்

## அமெரிக்காவில் 133 வாகனங்கள் ஒன்றுக்கொன்று மோதி விபத்து



அமெரிக்கா- டெக்சாஸின் ஃபோர்ட் வொர்த்தில் உள்ள இன்டர்ஸ்டேட் 35 வெஸ்டில், சிறிய கார்கள், எஸ்யூவிகள் முதல் 18 லொரிகள் வரை மொத்தமாக 133 வாகனங்கள் ஒன்றுக்கொன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஆறு பேர் உயிரிழந்துள்ளதாக வொர்த் பொலிஸ்துறை தெரிவித்துள்ளது.

அன்று (வியாழக்கிழமை) காலை 6 மணியளவில் சி.டி. மற்றும் சுமார் ஒரு மைல் தொலைவிற்கு இந்த விபத்து பதிவானது. டல்லாஸ்-ஃபோர்ட் வொர்த் மற்றும் ஆஸ்டின் பகுதிகளில் மோசமான வானிலை நிலவரங்களில் இந்த சம்பவம் ஒன்று. இதில் உறைபனி மழை மற்றும் பனிக்கட்டி ஆகியவை அடங்கும்.

ஒரே இரவில் 300க்கும் மேற்பட்ட விபத்துக்கள் பதிவாகியுள்ளன. 103 பெரிய விபத்துக்கள், தனிவழிப்பாதையில் 133 பெரிய விபத்துக்கள், 86 சிறு விபத்துக்கள், நான்கு சிறு நகர உபகரண விபத்துக்கள், இரண்டு பெரிய நகர உபகரண விபத்துக்கள் மற்றும் ஒரு பெரிய நகர உபகரண விபத்துக்கள் ஆகியவை தனிவழிப்பாதையில் பதிவாகியுள்ளன.

ஃபோர்ட் வொர்த்தில் வியாழக்கிழமை நடந்த விபத்தைத் தொடர்ந்து குறைந்தது 65பேர் உள்ளூர் மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சை கோரியுள்ளனர் என்று தீயணைப்புத் துறைத் தலைவர் ஜிம் டேவிஸ் தெரிவித்தார். சம்பவ இடத்தில் ஏராளமான நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதாக மெட்ஸ்டார் ஆம்புலன்ஸ் சேவையின் செய்தித் தொடர்பாளர் மாட் சவாட்ஸ்கி தெரிவித்தார்.

மேலும், 'விபத்தில் உயிரிழந்தவர்கள் அனைவரும் பெரியவர்கள், விபத்து நடந்த இடத்திலிருந்து 36பேர் கொண்டு செல்லப்பட்டனர்' என கூறினார். மேலும், நான்கு அதிகாரிகள் காயமடைந்தனர். அவர்களில் மூன்று பேர் வேலைக்குச் சென்று கொண்டிருந்த போது விபத்தில் சிக்கியுள்ளனர். சம்பவ இடத்தில் பணிபுரியும் போது ஒருவர் காயமடைந்ததாக பொலிஸ்துறைத் தலைவர் நொக்ஸ் தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட மூன்று பேர் ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர் என்று சவாட்ஸ்கி கூறினார். சம்பவ இடத்திலிருந்து கொண்டு செல்லப்படாத பாதிக்கப்பட்டவர்களுக்கு தங்குமிடம் பேருந்துகள் வந்தன.

## மியன்மாரின் இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக தடைகளை அறிவித்தது அமெரிக்கா



மியன்மாரின் இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக அமெரிக்கா தடைகளை விதித்துள்ளது.

மியன்மாரில் அதிகாரத்தை கைப்பற்றியுள்ள இராணுவதலைவர்களுக்கு எதிராக தடைகளை விதிக்கும் உத்தரவில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கைச்சாத்திட்டுள்ளார்.

புதிய தடைகள் இராணுவ தலைவர்கள் அவர்களது குடும்பத்தவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்களை இலக்காக கொண்டுள்ளன.

அமெரிக்காவில் உள்ள மியன்மார் அரசாங்கத்தின் ஒரு பில்லியன் டொலர்களை இராணுவம் பயன்படுத்துவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளையும் அமெரிக்க அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர்.

## 200 மில்லியன் தடுப்பூசி அளவை பெறும் ஒப்பந்தத்தை இறுதி செய்தது அமெரிக்கா!

ஃபைசர் மற்றும் மொடர்னா நிறுவனங்களின் 200 மில்லியன் கொரோனா வைரஸ் தடுப்பூசி அளவை பெறும் ஒப்பந்தத்தை அமெரிக்கா இறுதிசெய்துள்ளது. இது கிட்டத்தட்ட ஒவ்வொரு அமெரிக்கருக்கும் தடுப்பூசி போடுவதற்கு போதுமானதாக இருக்க வேண்டும் என ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

தேசிய சுகாதார நிறுவனங்களுக்கான விஜயத்தின் போது, அன்று (வியாழக்கிழமை) இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இதில் ஃபைசர் நிறுவனத்தின் 100 மில்லியன் டோஸ் அளவும் மொடர்னா நிறுவனத்தின் 100 மில்லியன் டோஸ் அளவும் இதில் அடங்கும். ட்ரம்ப் நிர்வாகத்தின் போது உத்தரவிடப்பட்ட 400 மில்லியனுக்கும் மேலான கூடுதல் அளவுகளைப் பெற மத்திய அராங்கத்துக்கு அறிவுறுத்துவதாக பைடன் கடந்த மாதம் கூறினார்.

புதிய ஒழுங்கு நடைமுறையில், அமெரிக்கா 300 மில்லியன் மக்களுக்கு இரண்டு டோஸ் தடுப்பூசிகளை முழுமையாக தடுப்பூசி போடுவதற்கு போதுமான விநியோகத்தைக் கொண்டிருக்கும் என அவர் மேலும் கூறினார். ஆரம்பத்தில் திட்டமிட்டதை விட ஒரு மாதம் விரைவில், மே மாத இறுதிக்குள் ஃபைஸரும் மொடர்னாவும் தலா 100 மில்லியன் டோஸை வழங்குவதற்காக உற்பத்தியை விரைவுபடுத்துகின்றன என்று பைடன் தெரிவித்தார்.



## மலேசியாவில் உள்ள வெளிநாட்டவர்களுக்கு இலவச தடுப்பூசித் திட்டம்!

மலேசியாவில் தங்கியுள்ள வெளிநாட்டுப் பிரஜைகள், தேசிய நோய்த்தடுப்பு மருந்துத் திட்டத்தின் கீழ் கொரோனா தடுப்பூசிகளை இலவசமாக வழங்க அந்நாட்டு அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

தடுப்பூசித் திட்டத்திற்குத் தலைமை தாங்கும் அமைச்சர் கைரி ஜமாலுதீன் அன்று (வியாழக்கிழமை) வெளியிட்டுள்ள டுவிற்றர் பதிவில் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

அத்துடன், நாட்டில் உள்ள அனைத்து வெளிநாட்டினருக்கு இம்மாத இறுதிக்குள் தடுப்பூசியின் முதல் டோஸ் வழங்கப்பட்டு விடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில், வெளிநாட்டு இராஜதந்திரிகள், மாணவர்கள், வெளிநாட்டுத் தொழிலாளர்கள் மற்றும் ஐ.நா. அகதிகள் நிறுவனத்தின் அட்டை வைத்திருப்பவர்கள் உள்ளடங்குவார்கள் என அமைச்சர் கைரி ஜமாலுதீன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கொரோனா தடுப்பூசித் திட்டத்தில் மலேசியர்களுக்கு முன்னுரிமை இருக்கின்ற போதும், வைரஸ் பரவுவதைத் தடுக்கப் போதுமான பாதுகாப்பைப் பெறுவதற்கு குடிமக்கள் அல்லாதவர்களுக்கும் தடுப்பூசி போடுவதை உறுதி செய்வது அவசியம் என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்று நோயின் பெரும்பாலான கொத்தணிகள் தற்போது, அலுவலகங்கள், கட்டுமானத் தளங்கள் மற்றும் தொழிற்சாலைகள் உள்ளிட்ட பணித் துறைகளிலேயே ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# ஆயிரம் அடி உயரத்தில் இரு பெரும் பாறைகள் இடையே கயிற்றைக் கட்டி நடந்து இளைஞர் சாதனை..!



ஆஸ்திரேலியாவில் உள்ள மிக உயர்ந்த இரு பாறைகளுக்கு நடுவே கயிற்றினைக் கட்டி அதன்மீது நடந்து ஒருவர் சாதனை படைத்துள்ளார்.

இங்கிலாந்தைச் சேர்ந்த ராயன் ராபின்சன் என்பவர் உயரமான இடங்களுக்கு நடுவே கயிற்றைக் கட்டி அதன் மீது நடந்து செல்வது வழக்கம். அதற்காக ஆஸ்திரேலியாவின் டாஸ்மேனியா தீவுக்கு வந்த ராபின்சன் அங்குள்ள கேப் பில்லர் என்ற இரு பெரும் பாறைகளுக்கு நடுவே கயிற்றைக் கட்டி நடந்தார்.

கடல் மட்டத்தில் இருந்து சுமார் ஆயிரம் அடி உயரத்தில் நடந்து சென்ற அவர், ஆட்டம் காண வைத்த ஊழிக் காற்று, கொந்தளித்த கடல் ஆகியவற்றின் நடுவே கயிற்றில் நடந்து சாதனை படைத்துள்ளார்.

# உலகின் முதல் வெற்றிகரமான முகம் மற்றும் கைகள் மாற்று அறுவை சிகிச்சை!



உலகின் முதல் வெற்றிகரமான முகம் மற்றும் இரு கைகள் மாற்று அறுவை சிகிச்சையை செய்து அமெரிக்க வைத்தியர்கள் சாதனை படைத்துள்ளனர்.

22 வயதான ஜோ டிமியோ (Joe DiMeo ) என்பவருக்கே குறித்த அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த நபர் கடந்த 2018 ஆம் ஆண்டு கார் விபத்தொன்றில் சிக்கினார். இதனால் அவரது உடலில் *80%* க்கும் மேலான பகுதி தீக்காயங்களினால் பாதிக்கப்பட்டது.

குறிப்பாக உதடுகள் மற்றும் கண் இமைகளை அவர் இழந்ததோடு அவரது விரல் நுனிகளும் வெட்டப்பட்டன.

இந் நிலையில் அவரது நிலையை அறிந்த , நியூயோர்க்கிலுள்ள லேங்கோன் (NYU Langone) என்ற வைத்தியசாலையொன்று 2019 ஆம் ஆண்டு அவருக்கு சிகிச்சை அளிக்க முன்வந்தது.

இதனையடுத்து கடந்த ஓகஸ்ட் மாதம் அவருக்கு இரு கைகள் மற்றும் முக மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

இச் சிகிச்சையின் மூலம் உலகின் முதல் வெற்றிகரமான முகம் மற்றும் இரு கைகள் மாற்று அறுவை சிகிச்சையை மேற்கொண்ட நபர் என்ற சாதனை ஜோ டிமியோ படைத்துள்ளார்.

மேலும் இவ் அறுவை சிகிச்சையானது "தனது வாழ்க்கையில் இரண்டாவது வாய்ப்பினை வழங்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 14.02.2021 அன்று வெளியிடப்பட்டது.